உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 32 | பிரமாதீச – ஐப்பசி – 10—11—73 | இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

# பாவம் போக்கும் முழுக்கு

## மூர்த்தி தலம் தீர்த்தம் :

இறையருளை உயிர்கள் பெறுவதற்கு வழியாக அமைந்தவை மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றுமாம். இவைகளால் உலகப் பயன்கள் மட்டுமன்றி, உயர்ந்த ஞானமும் கிடைக்கும் என்பதைத் தாயுமானவர்,

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்பதனுற் கூறுகின்றார்.

இறைவன் பல மூர்த்திகளின் வடிவாய் இலங்குதல் போலவே தீர்த்த வடிவாகவும் விளங்குகின்றான் என்பதை,

"சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே"

என்னும் அப்பர் அருள்மொழியால் அறிகின்றோம்.

"புறந் தூய்மை நீரான் அமையும்"

என்றபடி, பொதுவாக எங்கும் காணப்படுகின்ற நீர் உடல் அழுக்கைப் போக்கி, உடலைத் தூய்மை செய்யும். தெய்வ நீராகிய தீர்த்தங்கள் உயிரைப் பற்றியுள்ள வினை மாசைப் போக்கித் தூய்மை செய்யும். 'வினை' என்பது இங்குப் பெரும் பான்மையும் தீவினையாகிய பாவத்தையே.

## பாவம் போக்கும் தீர்த்தம் :

அறிந்தோ அறியாமலோ செய்த பாவம் தீரத் தீர்த்த யாத்திரை செய்து பல தீர்த்தங்களில் முழுக வேண்டும் என்பது நமது சாத்திரங்களின் முடிவு. அதன்படி பலர் தீர்த்த யாத்திரை செய்து பாவங்களைப் போக்கி நற்பயன் எய்திய வரலாறுகளை நாம் பல புராண இதிகாசங்களில் கேட்கின்றோம். இராமனைக் காட்டிற்கு அனுப்பிய கைகேயி, அங்குப் புண்ணியத் துறைகள் பலவற்றில் ஆடுமாறு கூறியதையும், அங்ஙனமே இராமன் தன் மனைவியுடன் கங்கையில் முழுகி நீர்க்கடன் ஆற்றியதையும், மற்றும் பம்பை, கோதாவரி முதலிய நதிகளில் முழுகினதையும் இராமாயணத்தால் அறிகின்றோம். அருச்சுனன் தான் அறியாது தருமனும், திரௌபதியும் அவர்களுக்கு உரிய ஆண்டில் தனியாக இருந்ததை ஒருநாள் பார்த்துவிட்ட பாவத்திற்காகத் தீர்த்த யாத்திரை செய்ததைப் பாரதம் கூறுகின்றது. இவ்வாறு பாவத்திற்குக் கழுவாயாகத் தீர்த்தங்களில் சென்று முழுகுதல் பெரும்பான்மையாக உள்ளமை பற்பல சான்றுகளால் விளங்குகின்றது.

## கங்கையும் காவிரியும் :

பாவங்களைப் போக்கும் புண்ணிய தீர்த்தங்கள் பல, பாரத நாட்டில் உள்ளன. அவற்றுள் தலையாயவை வடக்கில் கங்கை நதியும், தெற்கில் காவிரி நதியுமாகும். தீர்த்தங்களில் குறிப்பிட்ட சில தீர்த்தங்கள் சிறப்புடையனவாதல்போல, அவற்றில் முழுகுதற்குச் சில காலங்களும் மிகச் சிறந்தனவாகும். அவை அமாவாசை, பௌர்ணிமை, தைப்பூசம், சூரிய சந்திர கிரகண நாட்கள் முதலியனவாம். இக்காலங்களில் முழுதற்குரிய துறைகள் பல, காவிரி நதியில் உள்ளன.

> " ஈசன் எம்பெருமான் இடை மருதினில்
> பூசம் நாம்புகு தும்புனல் ஆடவே "

என்று அப்பர் பெருமான் காவிரியின் பூசத் துறைச் சிறப்பைக் குறித்தருளுகின்றார். இத்துறையில் வரகுண பாண்டியன் முழுகித் தனக்கு உண்டாகிய பிரமகத்தியை நீக்கிக்கொண்ட வரலாற்றைத் திருவிளையாடற் புராணம் விரித்துரைக்கின்றது. இப்

பூசத்துறை திருவிடைமருதூரை அடுத்து விளங்குவது என் பதை மேற்காட்டிய அப்பர் அருள்மொழியிலே காண்கின்றோம்.

## கடைமுழுக்கு :

தீர்த்தங்களில் முழுகுதற்கு உரிய சிறப்புக் காலங்களில் 'துலா மாதம்' எனப்படும் ஐப்பசித் திங்கள் முழுவதும் சிறந்த தாகும். அதிலும் அதன் முதல் நாளும், கடை நாளும் மிக்க சிறப்புடையன. அவற்றுள்ளும் கடைநாள் 'கடைமுழுக்கு நாள்' என மிகவும் சிறப்புற்று விளங்குதல் நாடறிந்த ஒன்று.

இத்துலா மாதத்தில் முழுகுதற்குரிய காவிரித்துறை மாயூரத்தில் 'துலாக் கட்டம்' எனப் பெருமைபெற்று விளங்கு கின்றது. இத்துறை 'இடப தீர்த்தம்' எனத் தனித்ததொரு சிறப்புப் பெற்று விளங்குவது. இங்கு இடப தேவர் காவிரியின் நடுவில் மேற்கு நோக்கி நிற்கின்றார். தீர்த்தத்திற்குத் தென் பால் உள்ள பகுதியில் உமையம்மை மயில் உருவத்துடன் இருந்து வழிபட்ட இறைவன் எழுந்தருளியிருப்பதால், 'கௌரி மாயூரம்' எனவும், வடபால் அவ்விறைவன் அன்பர்கள் இடப தீர்த்தத்தில் முழுகிய உடனே தரிசிப்பதற்கு வாய்ப்பாக எழுந் தருளியிருப்பதால் 'உத்தர மாயூரம்' எனவும் சொல்லப்படு கின்றன.

## செருக்கடக்கிய வள்ளல் :

கௌரி மாயூரத்தில் உமையம்மை மயில் உருவத்தில் இருந்து இறைவனை வழிபட்டிருந்த காலத்தில் சிவபெருமான் ஒரு திருவிளையாடலைக் கருதித் திருமால் முதலிய அனைத்துத் தேவர்களையும் அவரவர் ஊர்திகளில் ஏறி உடன் வருமாறு பணித்துத் தாமும் இடப வாகனத்தின்மேல் ஏறி எல்லா உலகங் களையும் மிக வேகமாக வலம் வந்து, விரைவில் மாயூரத்தின் துலாக் கட்டத்திற்கு மீண்டார். அதுபொழுது திருமால் முதலி யோரின் ஊர்திகளாகிய கருடன் முதலிய யாவும் இடப வாகனத் தைத் தொடர்ந்து செல்ல மாட்டாமல் பற்பல காத தூரத்திலே நின்றுவிட்டன. இதைக்கண்ட இடபம், தானே தனது வல்லமை யால் இந்த வெற்றியைப் பெற்றதாகக் கருதிச் சிறிது செருக்குக் கொண்டது. அதை யறிந்த சிவபெருமான் தமது திருவடியின் விரல் ஒன்றினைச் சிறிதே ஊன்ற, இடபம் அதனைத் தாங்க மாட்டாமல் பாதாலத்தில் விழ்ந்து, மீண்டுவர வகையறியாமல் பெருமானை நோக்கிப் பன்முறை ஓலமிட்டுத் தன்னை மன்னித் தருளும்படி வேண்டிற்று.

## இடபத்திற்கு இறை உபதேசம் :

அதனால் இரக்கங்கொண்ட சிவபெருமான், இடபத்தை நோக்கி, 'எழுக' என்று ஒருசொற் சொல்ல, இடபம் மேல் எழுந்து, காவிரி நதியின் நடுவே வந்து நின்று, இறைவனைப் பலவாறு துதித்தது. சிவபெருமான் மகிழ்ந்து, 'நீ இவ்விடத்தே என்றும் மேற்கு நோக்கி யிருந்து இங்கு முழுகி உன்னைத் தரிசிப்பவர்க்கு அவர்கள் வேண்டும் வரங்களைக் கொடுக்கும் ஆற்றலைப் பெற்று விளங்குக' என்று அருள்செய்து, 'மற்றும் உனக்கு வேண்டுவது யாது' என்று வினவ, இடபம், 'இனி என்றும் செருக்கினால் மயங்காதவாறு உண்மை ஞானத்தை உபதேசித்தருள வேண்டும்' என்று வேண்டிற்று.

சிவபெருமான், 'அவ்வுபதேசத்தை ஐப்பசி அமாவாசை நாளில் உத்தர மாயூரத்தில் செய்வோம்' என்று அருளினர். அதனை அறிந்த தேவர், முனிவர் முதலியவர்களே யன்றி நதிகளுட் சிறந்த கங்கை நதியும் அந்த ஐப்பசி அமாவாசையன்று இடப தீர்த்தத்தை அடைந்தது. சிவபெருமான் கட்டளைப்படியே அன்று இடபமும் அத்தீர்த்தத்திலே முழுகி, உத்தர மாயூரத்தில் உள்ள வள்ளலார் திருமுன்பை அடைய, அப்பெருமான் தம் ஆலயத்தின் தென்பால் தட்சிணாமூர்த்தியாய் எழுந்தருளி, உண்மை ஞானத்தை இடப தேவர்க்கு உபதேசித்தருளினர். இதனாலே எங்கும் இல்லாத முறையில் வள்ளலார் கோயில் தட்சிணாமூர்த்தியின் திருமுன்பில் இடபம் காணப்படுகின்றது. இடப தேவரைப் பற்றிய இவ்வரலாறு இங்ஙனம் மாயூரப் புராணத்தில் சொல்லப்படுகின்றது.

## இடபதீர்த்தச் சிறப்பு :

உலகில் உள்ள தீர்த்தங்கள் பலவும் ஒரு சமையம் கயிலாயத்தை அடைந்து சிவபெருமானை நோக்கித் தவம் செய்தன. அதற்கு அப்பெருமான் மகிழ்ந்து அவைகட்குக் காட்சியளித்து, 'உங்களுக்கு யாது வேண்டும்' என்று வினவ, 'பாவஞ் செய்தோர்கள் எங்களிடம் வந்து முழுகித் தாங்கள் செய்த பாவத்தை நீக்கிக் கொள்ளுதலால், அப்பாவங்களை நாங்கள் அடைந்துள்ளோம். இனி நாங்கள் எந்தத் தீர்த்தத்தில் முழுகி அவைகளைப் போக்கிக் கொள்வது என்று அருள வேண்டும்' என வேண்டின. அவைகட்குப் பெருமான் துலா மாதத்தில் மாயூரம் இடபதீர்த்தத்தில் முழுகுமாறு அருள் செய்தபடி அவைகள் வந்து முழுகித் தூய்மை பெற்று, ஆண்டுதோறும் அவ்வாறே செய்வனவாயின. ஆகவே, ஐப்பசி மாதம் முழுவதும் எல்லாத் தீர்த்தங்களும் இடப தீர்த்தத்தில் இருக்கின்றன என்பதும், கங்கா

தீர்த்தம் அம்மாதத்து அமாவாசை நாளில் வந்து சேர்ந்து, முடிவு வரையில் உள்ளது என்பதும் மாயூரப் புராணத்தால் அறியப்படும் செய்திகள்.

### துலாக்கட்டம் :

இடபதீர்த்தக் கட்டம், துலாமாதமாகிய ஐப்பசிமாதம் முழுவதும் மாயூர நாதரும் வள்ளலாரும் தீர்த்தம்கொடுக்கும் சிறப்பால் துலாக்கட்டம் எனப் பெயர்பெற்றது. இப்போது பாமர மக்களால் 'லாகடம்' என வழங்கப்படுகிறது.

இம்மாதம் முழுவதும் மாயூர நாதரை இடப தீர்த்தத்திற்கு எழுந்தருள்விக்கும் விழாவை உமையம்மையே செய்விக்கின்ருள் என்பது அறியத்தக்கது. இம்மாத முப்பது நாட்களிலும் இடப தீர்த்தத்தின் தென்கரையில் மாயூர நாதரும், வடகரையில் வள்ளலாரும் எழுந்தருளித் தீர்த்தம் கொடுப்பார்கள். நிறைவு நாளாகிய கடைசி நாளில் கடை முழுக்கு மிகச் சிறப்பானது. இக்காலங்களில் இடப தீர்த்தத்தில் முழுகிப் பல வகையான பாவங்களைப் பலர் போக்கிக்கொண்ட வரலாற்றை மாயூரத் தல புராணம் மிக விரிவாகப் பேசுகின்றது. சுருக்கமாகக் கூறுமிடத்து இந்த நாளில் காவிரியின் துலாக் கட்டத்தில் உள்ள இடப தீர்த்தத்தில் முழுகுதல் எவ்வகையான பாவத்தினின்றும் நீங்குதற்கு வழியாகும்.

### ஆயிரம் ஆனுலும் :

பாவம் போக்கும் முழுக்காகிய கடை முழுக்கு நாள் 15—11—73 அன்று வர இருக்கின்றது. அந்நாளில் இடப தீர்த்தத்தில் முழுகியவுடன் இடப தேவரையும், உத்தர மாயூரத்தில் உள்ள வள்ளலாரையும் தரிசிப்பதையே புராணம் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது.

மக்கள் பலர்க்கும் பாவத்தைப் போக்குவன கங்கை முதலிய தீர்த்தங்கள். அத்தீர்த்தங்களின் பாவத்தைப் போக்குகின்ற பெருமை மாயூரம் இடப தீர்த்தத்திற்கு இருக்கின்றது. இது பற்றித்தான் போலும், "ஆயிரம் ஆனுலும் மாயூரமாகாது" என்னும் பழமொழி தோன்றியது! இறையன்பு உள்ள அன்பர் பலரும் இவ்வுண்மையை உணர்ந்து கடைமுழுக்கு நாளில் மாயூரம் இடப தீர்த்தத்தில் முழுகி, இடப தேவரையும், இறைவனையும் வழிபட்டுச் செருக்கு நீங்கி, இன்னல் பலவும் களைந்து இன்புறுவார்களாக.

குருபாதம்

திருச்சிராப்பள்ளியில் 7—10—73 அன்று நிகழ்வுற்ற

**தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் ஆண்டுவிழாவில்**

தருமையாதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரிமாசாரிய சுவாமிகள்**

வழங்கியருளிய

# ஆசியுரை

திருச்சிற்றம்பலம்.

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே.

திருச்சிற்றம்பலம்,

## சமய எழுச்சி :

தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் ஆண்டுவிழா இரண்டு நாட்களாக மிகச் சிறந்த முறையில் திருச்சி மாநகரத்தில் கொண்டாடப்பட்டு வருவதை அறிய மகிழ்ச்சி எய்துகிறோம். தமிழ்நாடு முழுவதிலுமிருந்து பேரவையின் கிளைச்சங்கங்களின் பிரதிநிதிகளாக 1000க்கும் மேற்பட்டோர் வந்திருக்கின்றார்கள். வரலாற்றில் இடம் பெறத்தக்க அளவிற்கு அமைதியான — புரட்சிகரமான மாபெரும் தெய்விக ஊர்வலம் திருச்சி மா நகரத்தில் கொண்டாடப்பெற்றிருக்கிறது. இந்த மாநாட்டை— ஆண்டு விழாவை இவ்வளவு சிறப்பாக நடத்திவைத்த பெருமை திருச்சி மாநகரத் தெய்விகப் பேரவையினரையும், பேரவையின் தலைவர் குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்களையுமே சாரும். தமிழகத்தின் பல பாகங்களிலிருந்தும் பேரவைத் தொண்டர்கள் பலர்வந்திருக்கின்றனர்; சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவர்கள் பலரும் இதில் பங்குகொண்டுள்ளனர்.

## பழமையும் புதுமையும் :

பழமையில் ஈடுபாடும், புதுமையில் விருப்பும் கொண்டுள்ளவர்களை இந்நாளில் காண்கிறோம். பழையனவற்றையெல்லாம் கழித்துப் புதியனவற்றையெல்லாம் புகுத்தவேண்டும் என்று

தீவிரவாதிகளாய் உள்ளோர் கருதுகிறார்கள். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" என்று இலக்கணங்களுள் ஒன்றாகிய நன்னூலும் நமக்கு அறிவிக்கின்றது. அதேகொள்கையைத்தான் சமய-சமுதாய - இலக்கண வரலாற்றிலும் கண்டு வருகின்றோம். அதனையே நம்முடைய சமயநெறி முறைகளை மாற்றி அமைப்பதிலும் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். காலப்போக்கில் மாறுதல் அடையவேண்டுமே யல்லாமல், நாமே வலிய ஒரு கருத்தைக் கழித்து ஒரு கொள்கையைப் புகுத்தினால், குழப்பம் தோன்றி, மக்களுக்கோ - சமுதாயத்திற்கோ நன்மையில்லாமல் செய்து விடும்.

## உழைப்பே உயர்த்தும் :

ஒருவரை அல்லது ஓர் இனத்தவரை உயர்த்தவேண்டும் என்று இறைவன் திருவுளம் பற்றினாலும், அதற்கு அவ் இறைவனோ, இறைவன் வழிப்பட்ட சான்றோர்களோ, பலவகையிலும் துணைபுரியலாமேயல்லாமல், முற்றிலும் உயர்த்த முடியாது. ஒரு மனிதன் அல்லது ஒரு சமுதாயம் தமக்குத் தரப்படும் சந்தர்ப்பத்தை-வாய்ப்பை-உதவிகளைப்பயன்படுத்திஉயரத்தலைப் படல்வேண்டும். அவ்வாறு பயன்படுத்தி உயரத்தெரியாத உயிரினங்கள் இறைவனையோ சமுதாயத்தையோ குறைகூறிப் பயனில்லை. அவரவர் செயல் முறைகளுக்கு ஏற்பவே அவரவரும் அல்லது அவ்வவ் இனமும், அவ்வச் சமுதாயமும் உயர்கின்றன. அதனைத்தான்,

> " அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்;
> அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்;
> எவர்எவர்க் குதவினர் எவர்எவர்க்குதவிலர்
> தவர்அவர் நினைவது தமை உணர்வதுவே "

என்ற இப்பாடலில் நம் ஆதீன ஆதி பரமாசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளியுள்ளார்கள்.

## வினையாவது யாது :

வினை என்றவுடனேயே புரியாத பரிபாஷையாக எண்ணிக் கொள்ளவேண்டியது இல்லை. வினை என்பதற்குச் செயல், என்பதே பொருளாகும். இதனை, வினைத்தூய்மை, வினைத்திட்பம் முதலிய தொடர்கள்பற்றியும் அறியலாம். மேலும், 'வினை முற்றிய தலைமகன் பாகற்கு உரைத்தது' என்று வரும் அகப்

பொருள் துறையிலும் கூட 'வினை' என்பதற்கு, செயல் என்றே பொருள் கொள்ளப்படுகிறது. ஆகவே "அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்" என்றால் ஒவ்வொருவரும் தாம் முன்செய்த செயலுக்கு ஏற்ற வகையில் பிறந்துள்ளனர் என்பதாகும். அவ்வாறு பிறந்த அவர்கள் அடையும் நன்மை தீமைகள் யாவும் முன்செய்த செயலின் பயனை அனுபவம் என்பதே, அவரவர் வினைவழி அவரவர் அனுபவம் எனப்படுகின்றது. ஆகவே உலகத்தில் யார் யாருக்கு உதவி செய்கிறார்கள்; யார் யாருக்கு உதவி செய்யவில்லை, என்ற ஆராய்ச்சி வேண்டுவதில்லை. அவரவர் கடமையை அவரவர் செய்யும்பொழுது அவைகள் சிலருக்கு உதவியாகின்றன. சிலருக்கு உதவியாகவில்லை. இந்த உண்மையை உணர்ந்த தவ சிரேஷ்டர்கள் பிறரிடத்தில் உறவோ பகையோ பாராட்டாமல் தம்மை உணர்ந்து நிற்பதில் தலைப்படுவார்கள். உலகில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இவ்வாறு சமய நுட்பமாகப் பொருள் காண்போமேயானால் யாவும் நல்லனவாகவே முடியும்.

சீர்திருத்தம் :

சீர்திருத்தம் என்பதுபற்றிப் பலரும் பேசி வருகின்றனர். நெறிதவறுவோரை – நெறிதவறும் சமுதாயத்தை நெறியில் நிலைநிறுத்துவதே சீர்திருத்தமாகும். சீர்திருத்தம்பற்றிப் பேசுகின்றவர் பலரும் சீர்திருத்தம் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொண்டிருக்கிறார்களா? என்பதே ஐயப்பாடாக இருக்கிறது. நமது சமயம் இறைவனாலும் இறைவன் அருள்வழிப் பட்ட சான்றோர்களாலும் அமைக்கப்பட்டு அழைத்துச் செல்லப் பட்ட - தூய்மையான - சிறப்புமிக்க நெறியாகும். இந்நெறியில் மக்களின் அறியாமையால் அவ்வப்போதும் சில குறைபாடுகள் நிகழலாம். அக்குறைபாடுகளை அகற்றி நெறியைச் செம்மைப் படுத்துவதும் செம்மையான நெறியில் மக்களை அழைத்துச் செல்வதும் சான்றோர்களின் கடமை. இதுவே சமய நிலையங்களின் தலையாய கடமையுமாகும்.

"நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவின் நெருஞ்சில் முள்பாயும்
நெறியில் வழுவாது இயங்க வல்லார்க்கு
நெறியில் நெருஞ்சில்முள் பாயகி லாவே"

என்கின்றார் திருமூலர்.

**அரசும் அறநிலையங்களும் :**

இம்முறையில் சமய நிலையங்களின் தலைவர்கள் ஒன்றுகூடி தங்கள் கடமையைப்பற்றிச் சிந்தித்து சமயத்தின் ஆக்கத்திற்கு ஊக்கமூட்டி வருகின்றனர். இவ்வூக்கப்பாட்டின் ஒருபகுதியே தெய்விகப் பேரவை. தமிழ்நாடு தெய்விகப்பேரவை ஆண்டு தோறும்நடத்திவரும் ஆண்டு விழாக்களில் இத்தகைய சிந்தனைகளைச் செய்து செயலாற்றி வருகின்றது. சமய நிலையங்கள் சமுதாயத்திற்குச் செய்து வரும் பணிகள் பல. இத்தகைய நிலையான பணிகளால் இந்நிலையங்கள் அரசாங்கத்திற்குப் பல வகையில் துணையாய் நிற்கின்றன.

அறத்தின் அடிப்படையில் மக்கள் அன்புடன் காணிக்கையாகக் கொடுத்த பொருள்களை அம்மக்கள் நல்வாழ்விற்கே பயன்படுத்தி, மக்களிடையில் அறவுணர்வையும் நற்பண்பையும் ஒழுக்கத்தையும் கடமை உணர்வையும் வளர்த்து வருவது சமய நிலையங்களாகிய திருமடங்களும் திருக்கோயில்களுமாகும். சட்டத்தின் அடிப்படையில் அதிகாரத்தின் மூலமாக மக்களிடத்தில் வரி வசூலித்து மக்கள் நல்வாழ்விற்காக உணவு உற்பத்தி, கல்வி வசதி, மருத்துவ வசதி முதலியவற்றைச்செய்து அளிப்பது அரசாங்கமாகும். சுருங்கச் சொன்னால் உடலை வளர்க்க உறுதுணையாய் நிற்பது அரசு என்றும், உயிரை வளர்க்க உறுதுணையாய் நிற்பது சமய நிலையங்கள் என்றும் கூறலாம். ஆகவே அரசும் சமய நிலையங்களும் தனித்தனியே வேறுவேறு துறையில் செயற்பட்டாலும் இரண்டும் சமுதாய நலமாகிய ஒரு லட்சியத்திற்கே பாடுபடுகின்றவையாகும்.

**உடலும் உயிரும் :**

உடம்பில்லாமல் உயிர் உயர்வுபெற இயலாது. உயிர் உயிர் இல்லாத உடலை யாரும் போற்றமாட்டார்கள். இருப்பினும் உயிருக்காக உடல் படைக்கப்பட்டதா? உடலுக்காக உயிர் படைக்கப்பட்டதா? என்றால், உயிர் உய்வதற்காகவே இறைவனால் இவ்வுடல் படைத்துக் கொடுக்கப்பட்டது என்பது ஊன்றி உணர்வார்க்கு உண்மை புலனாகும். எனவே உடம்பைப் போற்றுவதெல்லாம் உயிரை வளர்ப்பதற்கே என்பதும் தெளிவாம். இதனையே திருமூலர்,

> " உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
> திடம்பட மெய்ஞ் ஞானம் சேரவும் மாட்டார்
> உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
> உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே "

என்று கூறுகிறார்.

உடலை நாம் போற்றுவது அதனை வளர்ப்பது எல்லாம் உயிர் நன்னிலைபெறவேயாகும். உடம்பில் தங்கியுள்ள உயிரை நன்னிலையில் போற்ற வேண்டியது மிகமிக இன்றியமையாதது என்பதை யாவரும் உணரவேண்டியது அவசியமாகும்.

பேரவையின் சிறப்பு :

வேறு எந்த அமைப்பினருக்கும் இல்லாத ஓர் சிரிய அமைப்பு பேரவைக்கு அமைந்து இருக்கிறது. உடல் வளர்ச்சிக்கு உறுதுணையாகிய அரசும் உயிர் வளர்ச்சிக்கு உறுதுணையாகிய சமய நிலையங்களும் ஒருங்கு இணைந்து உருவாக்கியிருப்பதே தெய்விகப் பேரவையாகும்.

மடாலயங்கள் மட்டும் இப்பேரவையை வளர்ப்பதாகச் சொல்வதற்கில்லை. திருமடங்களும், அறநிலையத்துறையினர் வழியாக அரசும் இணைந்தே இப்பணியைச் சிறக்கச் செய்து வருகின்றன. இவ்வமைப்பு மேலும் இம்முறையில் இன்றுபோல் என்றும் செயற்பட்டு நாட்டிற்கும், சமுதாயத்திற்கும், சமயத்திற்கும் நற்பணிசெய்துவர ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

---

## அட்டைப் பட விளக்கம் :

சிவாலயங்களில் நிகழும் சிறப்பு வழிபாடுகளில் சங்காபிஷேகம் மிகச் சிறந்தது. இச் சிறப்பு திருக்கடவூர்த் தலத்திற்கு மிகமிகச் சிறந்தது. காரணம், இங்குப் பெருமான் அமிர்தமே வடிவாக – அமிர்த கடேச மூர்த்தியாக விளங்குகின்றார். பலவகை அபிடேகங்களில் அமிர்தாபிஷேகம் சிறந்தது. அதனினும் சிறந்தது சங்காபிஷேகம். எனவே, அச்சங்காபிஷேகம் மற்றைய இலிங்கங்கட்கு நிகழ்வதைவிட அமிர்தலிங்கத்திற்கு நிகழ்வது மிகச் சிறப்பாகின்றதன்றோ! இச்சிறப்பு ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் நிகழ்வதுபோல, இவ்வாண்டிலும் நிகழ இருக்கின்றது. திருக்கடவூர் அமிர்தகடேசப்பெருமானது ஆலய இராஜ கோபுரமே இவ்விதழின் முகப்பில் தோன்றிக் காட்சியளிக்கிறது.

# தாயினும் நல்ல தயாபரன்

## வித்துவான். திரு. வே. மகாதேவன்

தென்னகச் சமயவரலாற்றைத்திருக்கோயிற் கல்வெட்டுக்கள் தெளிவுறுத்துகின்றன. சித்தாந்த நெறி சிறந்திருந்தமையைக் காட்டுகின்றன. திருமுறை பெருமையுற்றிருத்தலைப் பேசுகின்றன. தெய்வவழிபாடு மிகுந்திருத்தலைக் கூறுகின்றன. சமய வரலாறு, இலக்கிய வரலாறுகளின் கருத்துப் பேழைகள் கல்வெட்டுச் செல்வங்கள். திருமூலதேவநாயனர் திருமந்திரத்தில் முகிழ்த்த ஒரு கருத்து, தேவார மலராகித் - திருவாசகத் தேனுள் ஒரு துளியாகித் தெய்வீகத் தமிழ்மணம் வீசியது. அம்மலர் வரியே 'தாயினும் நல்லன்' என்ற கருத்து.

### தாய் தலை அன்பு :

அன்புடையவரே மக்கள்; மனிதன் ஆண்டவன்மாட்டுச் செலுத்தும் அன்பு பக்தி; நண்பனிடம் செலுத்துவது நட்பு. மனைவிமாட்டுச் செலுத்துவது காதல்; தம் உறவினர், அல்லார் - அஃறிணைப் பொருள் முதலானவற்றின் மீது செலுத்துவது அருள்; இஃது அன்பு என்னும் தாய்ஈன்ற குழவி. நேசம், நட்பு, காதல் எனப் பலவாறுன சொற்களில் அன்பின் தன்மையையே குறித்துள்ளனர்.

பலவகையான அன்புவகைக்குள் தலையாயது தாயன்பு. தாய் தன்னலன்களை - உயிரையும்கூடப் பெரும்பொருளாக மதிப்பதில்லை. பெறப்போகும் குழவிக்காகத் தன்னையே அர்ப்பணிக்கிருள். பத்துமாதம் சுமந்து பசுங்குழவியைப் பெறுகிருள்.

உயிரைத் துச்சமென மதித்துக் குழவியை ஈனும் துன்பினும் அவள் அடைவது மகிழ்ச்சி. இதனை,

" ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்ருேன் எனக்கேட்ட தாய் " (திருக்குறள் 69.)

" ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே " (புறம் 278)

என்னும் செய்யுள் அடிகளால் அறியலாம்.

தாய், குழந்தையைப் பெற்றெடுப்பதோடு அமைவதில்லை. பாலூட்டி வளர்க்கிருள். காப்பாற்றுகிருள். இக்கடமையை "ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே" என்ற பொன் முடியாரின் புறப்பாட்டு வரிகாட்டும்.

தன்மகன் துன்புற்ருல் தாய்தான் துன்புற்றுத் துவள்கிருள். அவன் இன்புற்ருல் தான் மகிழ்கிருள். மற்றவர் தன்மகனை இழிந்தவன் என்னும்போது கூட உயர்ந்தவன் எனத் தன் மனத்தில் கருதி வாழும் அன்பு - தாய் அன்பு.

சுமக்கும்போதும், வளர்க்கும்போதும் தன்மகன்என்ற பாசத்தால் உயிர்வாழும் பெருந்தகை தாய். உலக அன்புகளுள் உயர்ந்த அன்பு தாயன்பு; "தாய் தலை அன்பு" என்னும் சேக்கிழார் திருவாக்கு இதனைக் காட்டும் சான்ருகும்.

## தாயன்பில் குறைபாடுகள் :

தாயன்பு உலகவாழ்வாளரின் அன்பில் தலையானதே; ஆயினும் அதிற்சில குறைகள் அமைந்துகிடக்கின்றன

தன் மக்கள் இருவர். ஒருவன் நன்கு படித்தவன். மற்ருெருவன் கல்லாதவன். தாய் நிச்சயமாகக் கற்றவனுக்குச்சலுகை தரத்தான் செய்வாள். மாருகத் தாயின் மனத்தைக்கூட மாற்றுவது கல்வி. இதனைப்,

"பிறப்பு ஓரன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்" (புறம். 183.)

என்னும் நெடுஞ்செழியன் கூற்ருல் அறியலாம்.

இருமக்களில் செல்வமுடையவனிடம் தாயின் விருப்பம் அதிகமாக இருக்கும். "இல்லானை ... ... ... ... ஈன்றெடுத்த தாய் வேண்டாள்" என்பது முன்னோர் வாக்கு.

தாயன்பு சில காரணங்களால் தடுமாற்றம் அடைகிறது. தாயும் மனிதப்பிறவிதானே! வேண்டுதல் வேண்டாமைக் குணங்கள் தாய் அன்பின் தலைமையை நிலைகுலைவிக்கின்றன.

## தாயிற் சிறந்த தயாவான தத்துவன் :

இறைவன் அருட்கடல். அடிசார்ந்தவர்க்கு முடியா இன்பம் நிறையக் கொடுப்பினும் குறையாச்செல்வன்.

தாயன்பால் இம்மைவாழ்வுதான் தலைசிறந்ததாக்கப்படுகிறது. இறையருள் இம்மை - மறுமைப்பயன்களைத் தருகிறது.

தாயன்பு வேண்டுதல் வேண்டாமையால் வேறுபாடும் அடைகிறது. இறைவன் நம்மீது வைக்கும் அருள், வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் செய்வதல்லவா ? அஃது யாண்டும் இடும்பை இலவாக்குகிறது.

இறைவன் ஒத்த பிறப்பளிக்கிறான். ஒருசேரக் காக்கின்ற - அழிக்கின்ற நாயகன் உலகத்தவர்க்கெல்லாம் ஒரே நிலையில் அருள் பாலிக்கும் அருளாளன். நன்றியுடைய மிருகம் நாய். மனிதப்பிறவி எடுத்த நம்மில் பலர் நன்றியற்றோர். ஆகவே, நாயினும் இழிவான நம்மையெல்லாம் காப்பவன் சிவன். வேறு பாடு சிறிதும் பேணாது நாயினும் இழிந்த நம்மையெல்லாம் காக்கின்ற தாயிற்சிறந்த தயைஉருவு - கருணை வடிவம், சிவபெருமான். இதனை,

“ நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே, தேனார் அமுதே சிவபுரனே ”

என்ற திருவாசகப் பகுதியால் அறியலாம்.

## பால் நினைந்தூட்டும் தாயினும் பரிந்தோன் :-

தாய்மார்கள் சிலர், குழவி அழுவதன் முன்பு நேரமறிந்து பாலூட்டுவர். அழுதபின் ஊட்டுவாரும் உண்டு. அழட்டுமே என்று அவர் பணியைத் தொடர்வாரும் உண்டு. இப்படிப் பல வகைகள்.

குழந்தை பசிக்கும் நேரம் அறிந்து ஊட்டுபவளாகவே கொள்ளினும், தாய் மனிதப்பிறப்பு. மானுடன் இடத்தே மாறி வரும் குணங்கள் மூன்று. இராஜசம், தாமசம், சாத்வீகம் என்பவை அவை. மாறிவரும் குணத்திற்கேற்பத் தாயின் மனம் வேறாகிறது. அவள் செலுத்தும் பரிவும் மாறுகிறது. சில நேரங்களில் குழந்தையைப் புறக்கணிக்கவும் செய்கிறாள்.

இறைவன் மூன்று குணங்களும் அற்றவன். அருள் வடிவினன். உலக உயிர்களுக்கு எப்போதும் அருள்பாலிக்கும் அருட்கொண்டல். இறைவன் அடியவர்மீது தாயினும் மிக்க பரிவு செலுத்துவான். வேண்டியவர்க்கு வேண்டியன செலுத்து

கிறுன். ஆண்டவன் செலுத்தும் பரிவால் அடியவரின் உள்ளமும் - உடலும் உருகுகின்றன. உள்ளத்தில், ஒளி-சிவ உணர்வு பெருகுகிறது. ஆனந்தத்தேனை-அருளமுதை அடியவர் அருந்துகின்றனர்.

"பால் நினைந்தூட்டும் தாயைக் காட்டிலும் மிகப் பரிவுடன் அடியவரைப் பாதுக்காப்பவன் சிவபெருமான்" இதனை,

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

(பிடித்த பத்து. பாட்டு-9)

என்ற திருவாசகப் பாடலால் அறியலாம்.

**தாயினும் நல்லன் :-**

இறைவன் தாயைக் காட்டிலும் தண்ணளியுடையவனாக இலங்கி அடியவர்களைக் காக்கிறுன். தாயினும் சிறந்த தயாபரன்; உலக உயிர்களைப் படைக்கிறுன். உயர்நெறி செலுத்துகிறுன். பிறவிப் பிணியையும் தடுக்கிறுன்.

அன்னை 'பசுமட் குடத்திலிருந்த பலாப்பழம் குடமுடையாது பழம் சேதப்படாது வெளிப்படல் போலக்' குழவியைப் பெறுகிறுள். அத்தாயையும் உயிர் தவறாது காக்கின்றுன் ஈசன். உடல் உயிர்த்துன்பங்களைத் தாயினும்மேலாக இருந்து தணிவிப்பவன் அவன். இதனை வேதத்தில் 'தாயறியாக் கருவில் இருந்து அமுதூட்டும்' என்ற அனுபூதிக் கூற்றினுல் அறியலாம் எனத் திருவாசக வியாக்கியானம் (பாகம் 1, பக்கம் 267-69) கூறுகிறது.

'தன்னையொப்பார் இல்லாத தலைமகன் தீயினும் வெம்மையுடையவன். நீரினும் தண்மையுடையவன்' என்றாலும் இறைவனின் அருளை அறிவார் இல்லை.

சேயினைக் காட்டிலும் நல்லவன். அணிகலனாக விளங்குபவன். நல்லடியார்களுக்குத் தாயைக் காட்டிலும் நல்லவன் சிவன் என்பர் திருமூலர்.

" தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறிவாரில்லை
சேயினும் நல்லன், அணியன்! நல்லன் பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடையோனே." (எண் 8)

என்பது திருமூலர் திருமந்திரம்.

## தாயினும் நல்ல தலைவன் சங்கரன் :

அடியவர்கள் இறைவனைத் தாயினும் நல்ல தலைவன் என்று கூறிப் போற்றுவர் என்று திருஞானசம்பந்தர் திருக்கோணமலைத் திருப்பாடல் ஒன்றில் கூறுவர்.

" தாயினும் நல்ல தலைவர் என்று அடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள் "

திருநாவுக்கரசர் ஆதிபுராணத் திருக்குறுந்தொகையில் சிவபெருமான் தாயினும் உயர்ந்தவன் - தாயினும் நல்ல சங்கரன் எனக் குறிப்பர்.

" தாயினும் நல்ல சங்கர னுக்கன்பர்
ஆய உள்ளத்து அமுது அருந்தப்பெறுா்
பேயர் பேய்முலை யுண்டுயிர் போக்கிய
மாயன் மாயத்துப்பட்ட மனத்தரே "

தென்னகக் கல்வெட்டுக்கள் தென்னாட்டு மக்கள் 'தாயினும் நல்லான் தம் சிவன்' என்ற எண்ணத்துடன் எழில்வாழ்வு நடத்தியதனைக் காட்டுகின்றன. திருக்கோயிலுக்கு, 'தாயினும் நல்ல சோழிச்சுரம்' எனப் பெயரிட்டனர். தங்கள் ஊருக்குப் பெயரிட்டனர்". தாங்களும் சூட்டிக் கொண்டனர்.

## தாயினும் நல்ல சோழீச்சரம் :

சேலம் மாவட்டத்தில் ஆறகளூர் என்ற ஊர் உள்ளது. முற்காலத்தில் பிலாடு அல்லது ஜனநாத வளநாட்டில் மகதை மண்டலத்தில் அரூர்க் கூற்றத்தில் இவ்வூர் அமைந்திருந்தது. ஆறகளூரில் அமைந்திருந்த சிவன் கோயில் தாயினும் நல்ல சோழிச்சுவரம் எனப் பெற்றது. இக்கோயிலில் எழுந்தருளி யிருந்த சிவபெருமான் தாயினும் நல்ல சோழிச்சுரம் உடைய நாயனர் எனப் பெற்றார். இக்கோயிலில் உள்ள ஒன்பதாவது ஆண்டுக்குரிய கல்வெட்டு ஒன்று ஆறகளூர்த் தாயினும் நல்ல சோழிச்சுரம் உடைய நாயனர்க்கு வழிபாடு திருப்பணிகளுக்காகக்

குறுக்கைப்பாடி என்ற சிற்றூர் தரப்பெற்றமையைக் காட்டுகிறது. (G. R. E. No. 454 of 1913.) திருக்காமீஸ்வரம் உடைய நாயனர் தாயினும் நல்ல சோழீச்சுரம் உடைய நாயனர் பொன்பரப்பின நாயனர் கோயிலார் சேரமானர்க்கு நிலக்கொடை தந்தனர். 200 குழி நஞ்சையும் 2,000 குழி புஞ்சை நிலமும் இச்சேரமானுக்கே குறுக்கப்பாடி பாக்கன்பாடி இனத்தின்பாடி விசலூர் முதலான ஊர்களில் தரப்பெற்றதாகப் பதின் மூன்ருவதாண்டிற்குரிய மற்றொரு கல்வெட்டு (G. R. E. Ne 434 of 1913. I. M. P. S. M. No. 27) கூறுகிறது. இக்கல்வெட்டுச் சான்றுகள் தாயினும் நல்லன் என ஆறகளூர்ச்சிவன் அழைக்கப்பட்டவாற்றினைக் காட்டுமன்றோ ?

## தாயினும் நல்லபுரம் :-

திருச்சி மாவட்டம் ஊட்டத்தூரிலுள்ள மூன்றாம் குலோத்துங்கனின் இருபத்தோராவது ஆட்சியாண்டுக்குரியதொரு கல்வெட்டு (24th Dec. 1198) தாயினும் நல்லபுரம் என்ற பெயரில் ஓரூர் இருந்ததனைக் காட்டுகிறது. உறத்தூர் நாடு நகர வணிகப் பிரிவினர் கி. பி. 1198 இல் உறத்தூர்த் தொருமானி நாயனர் கோவிலில் உள்ள உத்தமசோழன் மண்டபத்தில் கூடினர். திருவள்ளுவப்பாடி நாட்டு வெண்மணிப்பாடிச் சிற்றூரைத் தாயினும் நல்லபுரம் என்ற வணிக நகரமாக மாற்றினர். குலோத்துங்கசோழ வாணகோவரையர்க்காக நடைபெற்றதாகக் கல்வெட்டுக் கூறுகிறது. "இப்படிக்கு கல்வெட்டு விச்சோம் எழுபத்தொன்பது நாட்டோமும்" எனக் கல்வெட்டுக் கூறுகிறது. (A. R. E. No 456 of 1913) இக்கல்வெட்டால் 'தாயினும் நல்லபுரம்' என்றதோரூர் இருந்ததனைக் கூறுகிறது.

## தாயினும் நல்ல பெருமான் :-

சேலம் மாவட்டம் ஆத்தூர்ப் பகுதியில் குடவூர்ச் சிவன் கோயில் முற்காலத்துத் திருவேகம்பம் எனப்பெற்றது. இக்கோயில் கல்வெட்டுக்கள் இரண்டில் (A. R. E. No. 463, 486 of 1913) 'தாயினு நல்ல பெருமான் என்பவன் கையொப்பம் இட்டுள்ளான். இவன் மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய அரசியல் தலைவன் ஆவான். (சாசனத் தமிழ்க் கவிசரிதம், பக்கம் 119)

## தாயினும் நல்ல பெருமாளான இளங்கோவேளார் :

திருவெண்காட்டிலுள்ள மூன்றாம் இராசராசனின் நான்காம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று சேந்த மங்கலத்தினைச் சேர்ந்த

[ தொடர்ச்சி 677-ஆம் பக்கம் பார்க்க ]

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் - உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்

**திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை**

( மலர் 32. இதழ் 11. பக்கம் 592 இன் தொடர்ச்சி )

78 **என்னை யாண்டுள மருளறுத் தருளு நாள் என்றோ!
தென்னை யங்கனி நெருக்கினிற் சிதற அத் தென்னீர்
பின்னை வாழ்தடங் கழனியி லடைந்து பற் பெருங்கூழ்
தன்னை வானுற வளர்க்குமைந் நதி வளர் தலைவ!**

(சொ - ள்) தென்னை அம் கனி நெருக்கினில் சிதற - தென்னை மரங்களில் உள்ள அழகிய நெற்றுக்கள் நெருக்குண்டதால் மூக்கு ஊழ்த்து சிதறுண்டு வீழ்தலால் (உடையுண்டாதல்), அத் தெண்ணீர் - அத்தேங்காய்களின் தெளி நீரானது, பின்னை - பின்னர், வாழ்தடம் கழனியில் அடைந்து - உலக வாழ்க்கைக்கு ஏதுவாகிய பெரிய வயல் நிலங்களிற் போய்ச் சேர்ந்து, பல பெரும் கூழ் தன்னை - பல வகையான பெருமை மிக்க பசிய செஞ்சம்பாப் பயிர்களை, வான் உற - விண்ணளவும் ஓங்கிட, வளர்க்கும் - வளர்தலைச் செய்யும், ஐந்நதி வளர் தலைவ - பஞ்சநதி யென்னும் திருவையாற்றுத் திருக்கோயிலின் கண் ஒளியுற்று ஒளிரும் மகாதேவரே, (தேவரீர்) என்னை ஆண்டு - அடியவனை அடிமைப்படுத்தி, உளம் மருள் அறுத்து - மனமயக்கம் நீங்குமாறு செய்து, அருளும் நாள் என்று ஓ - அருள்புரிவது எந்நாளோ அறிகிலேன். (எ - று).

(கு - ரை) பின்னை - பின்னர். கழனி - செழித்த வயல். பெருங்கூழ் - பெருமை மிக்க பசிய செஞ்சம்பாப்பயிர். என்னையாண்டு அருள் - புலனைந்தும் அடக்க ஆட்கொண்டு அருள்க. உளமருள் - ஐம்புலன்களின் வாயிலாகத் தோன்றும் மனமயக்கம். அருளும் நாள் எந்நாளோ? - என்னை ஆட்கொண்டு அருளும் நாள் எந்த நாளோ? அறிகிலேன்.

79. தலைவ! நீயருள் புரியாயேல் எவ்வணந் தமியேன்
நிலைமை பெற்றிடல் கந்தியம் பாளையை நெடிய
கொலைசெய் மாசுணப் பணமென வயிர்ப்பொடு குரங்கு
மலைவுறும் பொழில் சூழுமையாற்றருள் வடிவே

(சொ - ள்) கந்தி அம் பாளையை - கமுக மரத்தினது அழகிய பாளையை, நெடிய கொலை செய் மாசுணப் பணம் என - மிகு கொலை செய்கின்ற பெரிய பாம்பின் படம் ஆகும் என்று, அயிர்ப்பு ஒடு - ஐயப்பாடு அடைந்து, குரங்கு - குரங்குகள், மலைவுறும் - போர் புரியத் தொடங்கும், பொழில் சூழும் ஐயாற்று அருள் வடிவே - (வளமிக்க) சோலைகள் சுற்றிலுமுள்ள திருவையாற்றிற் கோயில்கொண்ட அருளுருவாய செம்பொற் சோதியீச்சுரனே, தலைவ - உயிர்கட்கெல்லாம் ஒரு முதல்வரே, நீ அருள் புரியாயேல் - தேவரீர் திருவருள் புரியாயேயானல், தமியேன் நிலைமை பெற்றிடல் எவ்வ(ண்)ணம் - தனியனேன் ஞான நிலைமையினை யடைந்து உய்திபெறல் எங்ஙனம் ஆகும்? கூறியருள்க. (எ - று).

(கு - ரை) கொலைசெய் மாசுணம் - கொலை செய்கின்ற பெரிய பாம்பு. பணம் - படம்; ஐயாற்றருள் வடிவே - திருவையாற்றிற் கோயில்கொண்ட அருளுருவாய செம்பொற்சோதியீச்சுரனே. நீ அருள் புரியாயேல் - தேவரீர் திருவருள்புரியாயேயானல்; நிலைமை பெற்றிடல் - ஞான நிலைமையினை அடைந்து உய்தி பெறல்; எங்ஙனம் ஆகும்? கூறியருள்க.

80. வடுவி லங்குண மைந்நதி யுமைகர வளைச்சு
வடுவி லங்குருத் தெருக்குமல் லிகையின வரிப்பூ
வடுவி லங்குபொற் கடுக்கையும் இரணிய வரிக்கு
வடுவி லங்குளிர் மதியுமுளாயருள் வரமே,

(சொ - ள்) வடு இல் அம்குணம் - குற்றமற்ற அழகிய சாத்துவித குணமும் (தன்மை), உமை கரம் வளை சுவடு - உமையம்மையின் திருக்கரத்தின்கண் அணிந்த வளைத்தழும்பும், வில்லம் - வில்வ இதழும், குருத்து எருக்கும் - வெள்ளையெருக்க மலரும், மல்லிகை - மல்லிகை மலரும், இனம் - கூட்டமாகிய, வரிபூ (வண்டு) வடு இலங்கு பொன் கடுக்கையும் - இரேகைகளையுடைய அழகிய வண்டுகள் விளங்குகின்ற பொன்னிறமாகிய கொன்றை மலரினையும், இரணியம் குவடுவரிவில் - பொன்மலையாகிய கட்டமைந்த வில்லையும், அம்குளிர் மதியும் - அழகிய குளிர்ச்சி பொருந்திய சந்திரனையும் தரித்தருளிய, ஐந்நதி உள்ளாய் - திருவையாற்றிறைவனே, வரம் ஏ அருள் - நல்வரம் தந்தருள்வாயாக (எ - று).

( கு - ரை ) வடுவில் - குற்றமற்ற. வில்லம் - வில்வ இதழ். குருத்தெருக்கு - வெள்ளை யெருக்க மலர். இனவரிப்பூ - கூட்ட மாகிய இரேகைகளையுடைய மலர். பொன் கடுக்கை - பொன்னிற மாகிய கொன்றை மலர். இரணியம் குவடு - பொன்மலை. அருள் வரம் ஏ ! - நல்வரமே தந்தருள்வாயாக.

## அறுசீர்க்கழிநெடில் சந்த விருத்தம்.

81. வரநதி புன்னை வலம்புரி சண்பக மந்தாரையு
[மணிவோய் !
பரவறி யேனுள மீதி லுளம்பத பங்கயம் வைத்தருள்பூ
சுரர்கள் தெரித்திடு மாமறை கிள்ளைகள் சுந்தர
[மோடுரைசெய்
அரவ மிகும்பொழில் சூழ்தரு பேரெழில் ஐயாற்
[றுறைபவனே.

(சொ - ள்) வரம் நதி புன்னை வலம்புரி சண்பகம் மந்தாரை உம் அணிவோய் - கங்கை யாறு, புன்னைமலர், நந்தியாவர்த்தம், சண்பகப்பூ, மந்தாரை ஆயவற்றினை (செஞ்சடையின் கண்) அழகிதாகத் தரித்திருப்பவரே ! பூசுரர்கள் தெரித்திடு மாமறை - அந்தணர்கள் அறிந்து ஓதும் வேத மந்திரங்களின் இசையினை யும், கிள்ளை - கிளிகளானவை, சுந்தரம் ஒடு உரைசெய் அரவம் மிகும் பொழில் சூழ்தரு பேர் எழில் ஐயாறு உறைபவன் ஏ - அழகுடனே (வனப்போடு) அம்மறை இசையினை ஒப்ப உரைக்கும் இசையானது மிகப்பெற்ற சோலைகள் சூழப்பெற்ற பெரிய அழகினையுடைய திருவையாறு எனச் சிறப்பிக்கப்பெற்ற பெரும் பதியின்கண் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவரே ! ( தேவரீரை ), பரவு அறியேன் - புகழ்தற்கு அறியாதவனாகிய அடியனேன், உளம் மீதில் - மனத்தின் கண், ( தேவரீருடைய ) அம் பதம் பங்கயம் வைத்து அருள் - அழகிய அரவிந்தம் (தாமரை) ஆகிய சேவடிகளைப் பொருந்த வைத்துத் திருவருள் புரிந்தருள்க. (எ - று).

( கு - ரை ) பூசுரர்கள் தெரித்திடு மாமறைகட்குக் கிள்ளை கள் உரைசெய் அரவம் என்னும் பொருள் நயமாகும்.

" மதுராபுரி அங்கயற்கண்ணி பாகனை அம்மதுராபுரியழகிய கிள்ளைகள் உரைப்பதாக " ஒரு வெண்பா வருமாறு :-

" காண்டகைய மேனியும்ஒண் கந்தரமும் சுந்தரனாய்
ஆண்டதுவும் வேணிக்கு அமைந்ததும் — நீண்டமணி
மைக்கலிங்க மாக முகில் மாடமணி மாமதுரைச்
சொக்கலிங்க மென்னுஞ்சுகம் "

இப்பாட்டில் சொக்கு அல் இங்கு அம் எனப் பிரித்துப் பொருள் காணும் வனப்பு நோக்கத் தக்கது. கிள்ளை நாகண வாய்ப்புள் முதலியன வேதவொலி ஒலித்தலை ஆண்டாண்டு புலவர் கற்பனை கண்டுரைத்தல் மரபு.

வரம் நதி - கங்கையாறு. கிள்ளை - கிளி.

82. பவள விதழ்க்கடை சியரிடு குரவைப் பாடல் முழக்கி
[லெழுந்
தவகய னெட்டிலை யழகிய பனையின் ருறுகளைச் சிதறும்
நவமிகு பஞ்சந தியின்வள ருமையாள் நாயகனே
[சிறியேன்
கவலையும் வெய்யவி னையுமற வருளும் காலமும்
[ஒன்றுளதோ.

(சொ - ள்) பவளம் இதழ் கடைசியர் - பவழம் போலும் சிவந்த உதடுகளையுடைய மள்ளர் மகளிர்கள், இடு குரவை பாடல் முழக்கில் எழும் - இசை இட்டுப்பாடா நின்ற குரவைப் பாடலின் ஓசை முழக்கத்தால் எழுந்த, தவகயல் - பெரிய மீன்கள், நெடு இலை அழகிய பனையின் தாறுகளைச் சிதறும் - நீட்சியான ஓலைகளையுடைய அழகிய பனைமரத்தின் குலைகள் சிதறுண்டு போமாறு, (பாய்கின்ற) நவம் மிகும் - புது வருவாய் (யாணர்) மிக்க, பஞ்ச நதியின் வளர் உமையாள் நாயகனே - திருவையாற்றின்கண் முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்து அருள் செய் உமாதேவியாரின் தலைவராகிய பரசிவமே! சிறியேன் - மிகச் சிறுமையுடையவனாகிய அடியேன், கவலையும் வெய்யவினையும் அற - மனக் கவலைகளும் கொடிய பிறவிக்குக் காரணமாகிய வருவினைகளும் ஒழிய, அருளும் - தேவரீர் ஞானக் குரவராய் எழுந்தருளி வந்து அருள் உபதேசம் புரியும், காலமும் - சமயமும், ஒன்று உளது ஓ - ஒன்று உண்டாகுமோ? அதனைச் செய்தருளல் வேண்டும் (எ - று).

(கு - ரை) வெய்யவினை - கொடிய பிறவிக்குக் காரண மாகிய வருவினை. தவக்கயல் - பெரியமீன். நெடுஇலை - நீட்சியான ஓலை. நவமிகும் - புதுவருவாய்மிக்க. கவலையும் வெய்யவினை யும் - மனக் கவலைகளும், கொடிய பிறவிக்குக் காரணமாகிய

வருவினைகளும் ஒழிய, அருளும் காலமும் ஒன்று உளதோ - தேவரீர் ஞானக்குரவராய் எழுந்தருளி வந்து அருள் உபதேசம் புரியும் சமயமும் ஒன்று உண்டாகுமோ? அதனைச் செய்தருளல் வேண்டும் என்பதாம்.

83. உளவிருள் இரிதரு மாறு மகிழ்ந்தருள் ஒள்சுடர்
[கால்கதிரே!
விளவினில் உறுகனி வீழவொர் கன்றெறி
[விண்டுதொழும் பதனே!
தளமரை மிசையின மாமணி யைப்புரி சந்தமொ
[டுந்தருசெய்
வளமலி யுமைந்நதி மேவிய கிஞ்சுக வார்சடை
[வானவனே.

(சொ - ள்) ஒள்சுடர் கால் கதிர் ஏ - ஒண்மையாகிய ஒளியினை வீசுகின்ற ஞானசூரியனே, விளவினில் உறுகனி வீழ-விளா மரத்தின் கண் உள்ள (பொருந்திய) மிகுதியான பழங்கள் கீழே விழ்ந்திடுமாறு, ஓர் கன்று எறி விண்டு தொழும் பதன் ஏ - ஓர் மாயக்கன்றால் வீசி யெறிந்து அக்கனிகளை யுதிர்த்த கண்ணனாகிய திருமால் வணங்குறும் திருவடிகளை யுடையவரே! தளம் மரைமிசை இனம் மாமணியை புரிசந்தம் ஒடும் தருசெய் வளம் மலியும் - இதழ்கள் நிறைந்த தாமரை மலரினிடத்துக் கூட்டமாகிய அழகினொடு அழகிய முத்துக்களைச் சங்குகள் ஈனுதலைச் செய்கின்ற வளம் நிறைந்த வயல்களையுடைய, ஐந்நதி மேவிய கிஞ்சுகம் வார்சடை வானவனே - திருவையாற்றின்கண் எழுந்தருளிய சிவந்த நீண்ட சடாமகுடத்தையுடைய மகாதேவரே! உளம் இருள் இரிதருமாறு - (அடியேனுடைய) மனத்தின்கண் அறியாமையாகிய இருளானது ஒட்டெடுக்குமாறு, மகிழ்ந்து அருள் - மகிழ்ச்சியொடும் காட்சி தந்து உபதேசஞ்செய்தருள் வீராக.

(கு - ரை) 'கண்ணன் கன்றால் கனியுதிர்த்தமை'யை அறிக. உளவிருள் - மனத்தின் கண் அறியாமையாகிய இருள். இரிதரு மாறு - ஒட்டெடுக்குமாறு. மகிழ்ந்து அருள் - மகிழ்ச்சியொடும் அருள்புரிவீராக. ஐந்நதியாவன :- கங்கை சூரிய புட்கரணி, சந்திர புட்கரணி, கௌரி மூலைப்பாலாறு, இடபநதி என்பனவாம்.

84. வானவர் நண்ணரி தானவ! வைம்புல மாசுக
[ளைந்தருள்வாய்
பானமி குந்தெனின் வாழ்தரு மந்திகள் பாயவு
[திர்ந்திடுகாய்

கானவ ரிச்சிறை மாவிமிர் பொற்புறு காவியி
[லஞ்சிவிழ
மீனமெ ழுந்துமை மேடுகி ழித்தலர் மேவுமை
[யாற்றரசே!

(சொ - ள்) வானவர் நண்ண அரிது ஆனவ! - தேவர்கள் அணுகற்கு அரியவரே!, பானம் மிகும் தென்னின் வாழ்தரு மந்திகள்பாய உதிர்ந்திடுகாய் - இளநீர் மிக்க தென்னை மரங்களில் உறைகின்ற குரங்குக் கூட்டங்கள் பாய்தலினால் உதிரப்பெற்ற காய்களானவை, கானம் வரிசிறை மா இமிர் பொற்பு உறு காவி இலஞ்சி விழ - பண்பாடுகின்ற இரேகைகள் பொருந்திய சிறகுகளையுடைய வண்டுகள் ஆரவாரிக்கும் வனப்புமிக்க நீலோற்பல மலர்களையுடைய நீர்த்தடாகத்தில் விழ்தலால், மீனம் - மீன்கள், எழுந்து - குதித்து (மேற்கிளம்பி) மை மேடு கிழித்து அலர் மேவும் - நீருண்ட கரிய மேகங்களின் வயிற்றினைக் கிழித்து விட்டு மீளவும் அம் மலரிடத்து வந்து வதியும், ஐயாற்று அரசு ஏ - திருவையாற்று இராசாதிராசரே (மகா பிரபுவே), ஐம்புலம் மாசு களைந்து அருள்வாய் - ஐம்புலன்களாகிய குற்றங்களை நீக்கித் தூய்மையாக்கி மேனிலை யடையுமாறு திருவருள் புரிந்திடுக (எ – று).

(கு - ரை) வானவர் - தேவர்கள். மந்தி - குரங்கு. வரிசிறை - இரேகைகள் பொருந்திய சிறகு. ஐப்புலமாசு - மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற பஞ்ச உறுப்புகளிடத்து உண்டாகும் குற்றமாகும். இதனைத் தெய்வப்புலவராம்திருவள்ளுவர் தாம் யாத்த முப்பாலிலே அறத்துப்பாலில் 'அடக்கமுடைமை' என்ற அதிகாரத்தில்

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து"

எனவரும் குறளால் கூறியுள்ளார்.

---

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam Sirkazhi.

கீர்த்தியான கோயில்கள் பல தமிழகத்திலேயுண்டு; ஆனால் கீர்த்தியும், நேர்த்தியும் ஒருங்கே இணைந்த தூய்மையான கோயில் பிரமபுரி என்னும் சீகாழி.

(Sd) காசியப்பன்,

10—10—73. தமிழகச் செய்தியாளர் குழு.

# உமாபதி சிவமும் சிந்தாந்த நுட்பமும்

பண்டித வித்துவான்
திரு. கு. சுந்தரமூர்த்தி எம்.ஏ.,

உமாபதி சிவம் :- இவர் தில்லைப் பதியினர். ஆனந்தக் கூத்தரைத் தீண்டி வழிபடும் புண்ணியப்பேறுடையவர். மறைஞானசம்பந்தர்பால் உபதேசம் பெற்றவர். எடுத்துக்கொண்ட தலைப்பு உமாபதி சிவமும் சித்தாந்த நுட்பமும் என்றுள்ளது. பார்த்தற்கு இருபொருளும் தனித்தனி உள்ளது போலுள்ளது. ஆயினும் உமாபதி சிவத்தின் வரலாறே சித்தாந்தத்தின் நுட்பத்தை அறியத்தக்கதாயும், சித்தாந்தத்தின் நுட்பமே உமாபதி சிவத்தின் வரலாருகவும் அமைந்துள்ளது. சித்தாந்தம் முப்பொருளுண்மையை விளக்குகின்றது. உலகம் மூவினமை உடைமையான் அதனைத் தருதற்கு ஒருவன் வேண்டும், அவனே இறைவன் என இறையுண்மை கூறப்படுகின்றது. உயிர் என்பது இந்த உடலின் வேருனது; அறிவு இச்சை செயல்களுடையது; இன்பத்துன்பப் பயன்களை நுகருவது; கரணங்களோடு கூடியும் விடுத்தும் உள்ள நிலையில் ஐந்தவத்தைப் படுவது என உயிருண்மை கூறப்படுகின்றது. நெல்லுக்கு உமியும் நிகழ் செம்பினில் களிம்பும் சொல்லிற் புதிதன்று; தொன்மையே. அதைப் போன்றே உயிரையும் ஆணவமலம் பிணித்து நிற்கின்றது. காரணமாக வரும் இருவினைப் பயனுகிய இன்பத் துன்பங்களை அனுபவிக்கவே மாயா காரியமாகிய உடல் கொடுக்கப்பட்டது என்றெல்லாம் பாசமுண்மை பேசப்படுகின்றது. இவை யனைத்தும், நம்மைப்பற்றி நாம் அறிதற்குப் போதியனவாக உள்ளன. ஆனல் இம் மூவகை இலக்கணங்களையும் எண்ணி யெண்ணிப் பார்ப்பதால் மட்டும் பயனில்லை. இன்பத் துன்பத்திற்குக் காரணம் ஆணவம் என்ருல் இம்மூவகைப் பிணிப்பும் அகன்று வாழும் வாழ்வே நல்வாழ்வு எனத் தெரிகின்றது. அதற்குரியவன் நம் போன்று வினையுடையவனுக இருத்தல் இயலாது. எனவே வினையின் நீங்கி விளங்கிய அறிவினை உடையவனே அதற்கு உரியவனுவான். அப்பெரும் பொருளை அடைதற்குரிய வழி குருவருள் வழிநின்று இறைவழிபாட்டையும் அடியவர் வழிபாட்டையும் செய்வதே ஆகும். இம்மூவகை வழிபாடுகளையும் குரு, லிங்க, சங்கம வழிபாடென்பர். திருவைந்தெழுத்தை நீங்கா நினைவுடன்

சிந்தித்து இம்மூவகை வழிபாட்டையும் செய்யின் உயிர் உய்தி பெற்று வீடு பேறடையும். இவ்வழிபாடு தொடக்க முதல் இறுதி வரை வேண்டும்.

சித்தாந்த நூல்களில் உண்மை விளக்கம் என்பதொன்று உண்டு. அது திருவதிகை மனவாசகங் கடந்தாரால் அருளிச் செய்யப்பட்டது. சித்தாந்த நூல்களைப் பயில்வோர், தொடக்கத் திற் திருவருட் பயனையும் இந்நூலையும் பயின்றே பின்னர் பிற நூல்களைப் பயில்வர். 53 வெண்பாக்களால் ஆய இவ்வினிய நூலில் மேற்கண்ட மூவகை வழிபாட்டின் இன்றியமையாமை நன்கு வலியுறுத்தப் பெற்றுள்ளது.

" அப்பா இம் முத்திக் கழியாத காரணந்தான்
செப்பாய் அருளாலே செப்பக்கேள் — ஒப்பில்
குருலிங்க வேடமெனக் கூறில்இவை கொண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண் "1

" கற்று மனம்போல் கசிந்துகசிந் தேஉருகி
உற்றுசான் லிங்கம் உயர்வேடம் — பற்றுக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவர் பார் "2

என்பன அத்திருப்பாடல்கள்.

குருவழிபாடு :- இனி நம் உமாபதி சிவத்தின் வரலாற்றுக்கு வருவோம் உமாபதி சிவம் இம்மூவகை வழிபாட்டிலும் தலை நின்று ஒழுகியவர். " பட்டகட்டையிலே பகல்குருடு ஏகுதல் பாரீர் " என மறைஞானசம்பந்தர் அருளியதே இவர்க்கு உப தேசம் ஆயிற்று. அதன் வாயிலாக அவரைக் குருவாகக் கொண்ட இவர் அவர்தம் கைவழி வந்த கூழையும் ஏற்றுண்டா ரெனின் இவர்தம் குருபக்தியை என்னென்பது ! இவ்வனுபவம்

" வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம் "3

என்ற திருக்குறளுக்கு மிச்சில் — பரிகலசேடமும் பாண்ட சேடமும் ஆம் எனத் திருக்குறள் நுண்பொருள்மாலை ஆசிரியர்

1. உண்மை விளக்கம் - 51.
2. ,, ,, - 52.
3. குறள் - 85.

கூறிய உரையை உளங்கொள்ளச் செய்கின்றது. (பாண்ட சேடம் – எஞ்சிய உணவாகப் பாத்திரத்தில் இருப்பது. பரிகல சேடம் – ஒருவர் உண்ட பாத்திரத்தில் எஞ்சியிருப்பது.) உமா பதி சிவம் கைவழிவந்த உணவை உண்டனர் ஆதலின் பரிகல சேடத்தை உண்டவர் ஆகிறார். பிறிதோர் நினைவும் ஈண்டு வருகின்றது. எங்கள் குமரகுருபரசுவாமிகள் தம் ஞானசாரி யன்பால்ஒரு விண்ணப்பம் செய்கின்றார். "மேன்மையோடமர்ந்த ஞானசம்பந்த! வரமொன்று ஈங்கு எனக்கருளல் வேண்டும். அது திருமால் பதமுமன்று; இந்திர பதமுமன்று; பிரமபதமு மன்று. கல்வியும் ஒழுக்கமுமிலராய் நின்னுடைய தொண்டர் என்ற பெயரில் இருந்தாலும் பரவாயில்லை. அவர் அமுதுண்டு எஞ்சிய எச்சிலைத் தெருவில் எறிய அதை உண்ணும் நாய்க் கூட்டத்தில் முதல் நாயாக இருப்பின் போதுமானது" என வேண்டுகின்றார். கண்ணீர் சிந்தவும் மெய்ம்மயிர் சிலிர்க்கவும் வைக்கும் இவ்விண்ணப்பம் பண்டார மும்மணிக் கோவையி லுள்ளதாகும்.

"மேன்மையோ டமர்ந்த ஞானசம் பந்த
ஈண்டுனைத் தமியனேன் வேண்டுவ தியாதெனின்
அந்நிய மென்று மநந்நிய மென்றும்
இந்நிலை யிரண்டு மெய்திற் றென்றும்
பல்வே றுரைக்குநர் சொல்வழிப் படாது
திவ்விய பழுத்த சைவசித் தாந்தத்
திறவா நிலைமைபெற் றின்பமார்ந் திருக்கும்
பிறவா நன்னெறி பெறற்புரி வதுவே
அங்கது புரிதற் கரிதெனின் ஙிங்கொரு
சனனமியான் வேண்டுவ தினிதரு ளெனக்கே, அதுவே
ஐந்தரு நிழற்கீ ழரசுவீற் றிருக்கும்
இந்திர னாகிவாழ்ந் திருப்பதோ வன்றே
மலரோ னாகி மன்னுயிர்த் தொகுதி
பலர்புகழ்ந் திசைப்பப் படைப்பதோ வன்றே
அடலரா வணையில் அரிதுயி லமர்ந்த
கடவுளா யுலகங் காப்பதோ வன்றே, அவைதாம்
ஆரா வின்பமென் றரும்பெயர் பெறினும்
வாரா வல்வினை வருவிக் கும்மே
அன்னவை யொழியமற் றென்னைகொல் பிறவெனின்
விழுத்தகு கல்வியு மொழுக்கமு மிலராய்ப்
பழிப்புள ராயினு மாக வழுத்துநின்
பொன்னடித் துணைசேர் நின்னடித் தொண்டர்
திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த

பரிகலம் மாந்தியிப் பவக்கட லுழக்கும்
வரனுடை ஞமலி யாகிநின்
அருளையு மயரா தவதரிப் பதுவே!"

என்பது அப்பாடலாகும்.

அன்றியும் உமாபதி சிவம் அருளிச்செய்த எட்டு நூல்களில் நெஞ்சு விடுதூது நூலைத் தம் குருமூர்த்தியை வழிபடும் முகமாகவே பாடியருளியுள்ளார். இவ்வாற்ருன் இவர்தம் குருபக்தி விளங்கும்.

இலிங்கபத்தி :- தில்லை வாழந்தணர்களில் ஒருவராய உமாபதி சிவாச்சாரியார் அம்பலக் கூத்தனைத் தீண்டி வழிபடும் பேறுடையார். அந்நிலையில் தாம் தீண்டி வழிபாடாற்றும் நாளும் வந்தது. நெசவாளர் தெருவில் நெய்தற்கென வைத்திருந்த கஞ்சியைத் தம்குருவின் கைவழி உண்டார் எனக்கேட்ட தில்லை வாழந்தணர்கள் இவர் ஆசாரத்தினின்று தவறியவர் ஆதலின் பெருமானைத் தீண்டிவழிபடுதற்கு உரியர் ஆகார் என விலக்கினர். இவர்க்குரிய நாளில் தில்லை வாழந்தணர்களில் வேறெருவர் வழிபாடாற்றச் செல்ல அங்கு அச்சிவலிங்கத் திருவுருவம் காணப்பட்டிலது. துணுக்குற்ற அவ்வந்தணர் கேட்குமாறு "நாம் உமாபதி சிவத்தின்பெட்டகத்திலிருக்கிறேம்" என்னும் வானெலிச்செய்தி வந்தது. அதனை உணர்ந்த அந்தணர் உமாபதி சிவத்தின் பக்தி மேம்பாட்டினைக் கண்டு அவரையும் பூசைக் குரியராக்கினர். சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாருது குருவருளுடன் சிவலிங்க வழிபாட்டை இனிது ஆற்றியவர் என்பதற்கு இதனினூங்கு வேறு சான்று வேண்டுவதின்று.

(தொடரும்)

2. பண்டார மும்மணிக்கோவை 5. 18-43.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkali.

I had the privilege of visiting this temple. The temple is maintained extremely well. The management and priests deserve congratulations for the same.

(Sd) C. Lal,
Dy. Secy. Dept. of Mines, New Delhi,
Govt. of India.

20—10—73.

# திருமுறைப் பெருமை

வித்துவான். திரு. தா. குருசாமி

தமிழில் சமய இலக்கியத் துறையில் திருமுறை நூல்கள் மிகுந்த பெருமையுடையன. திருமுறைகளின் அருமை பெருமைகளை - திருமுறைகளை ஓதி உணர்ந்து அடைந்த பலனைத் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துக்குருமூர்த்தியவர்கள், தமது இலக்கணக்கொத்து ஏழாஞ்சூத்திர உரையில், கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்கள். "திருமுறை இருக்க வேற்று நூல்களை விரும்புதல் எதுபோன்றதெனில், பாற் கடலுள் பிறந்து அதனுள் வாழும் மீன்கள் அப்பாலை விரும்பாமல் வேறு பலவற்றை விரும்புதல் போல்வது" என்று கூறுவதிலிருந்து திருமுறைப் பெருமை அவரால் ஒருவாறு சுட்டிக்காட்டப் பட்டது.

உலகியலில் உழலும் மக்கள் உலகியல் நூல் ஒன்றையே விரும்புவர்; அவ்விருப்பின்மிகுதியால் மேலும் அந்நூலையே கற்று, அறிவு நூல் கல்லாது அவதிப்படுவர். காலச் சூழலில் அறிவு நூல் கற்பது குறைந்து வருதலால் உண்மையறிவுத் தேட்டம் கல்வி நிலையங்களிலும் மாணக்கர் ஆசிரியரிடத்தும் குறைந்து வருகிறது. இக்குறைவு வணிகத் துறையிலோ, பிற துறையிலோ நிகழ்ந்தால் வருந்துதற்கில்லை; அறிவுத்துறையில் நிகழ்கின்ற இதுபோன்ற நிகழ்ச்சியால் நாடு நலமிழக்கின்றது என்பதற்குத் தக்க சான்றாக இக்கால நிகழ்ச்சிகள் பலவும் உள்ளன.

உலக நூல் ஓதுபவர்க்கு உரிய எல்லா நலங்களும் - சுவைகளும் திருமுறைகளிலும் உண்டு. எனினும் மெய்யறிவு தரும் நூலை ஒரு சிலரே கற்பர். அதற்குக் காரணம் அதற்குரிய ஆற்றலும் அறிவும் வேண்டியிருப்பதேயாகும். இத்திருமுறை நூலை ஓதாதவருடைய கல்வி களர் நிலத்தில் இட்ட வித்தாகும். திருமுறைகள் நல்ல நிலத்து இட்ட வித்துப்போல வாழ்வில் பயன் மிக விளைக்கும். "நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே" என்றபடி நெல்லை முதன்மையாகக்கொண்டு நாம் உடலோம்புதல் போலவே திருமுறையை ஓதி நம் உயிரை வளர்க்கவேண்டும்.

இறைவனது முத்தொழிலையும் செய்யும் வல்லமை திருமுறைக்கு உண்டு. திருமுறை ஓதுவார்க்கு நோய் நீங்கும்; செல்வம் பெருகும்; ஞானமும் பெருகும். சிவபெருமானின் மந்திரங்கள் தங்கிய கருவூலமாகத் திகழ்கின்றன திருமுறைகள்.

## திருமுறைப்பண் முழங்கும் தலங்கள் :

சிதம்பரம் என்னும் தில்லைத் தலம் இயல்பிலேயே திருவருள் விளக்கம் உடையது. இதுபோன்ற தலங்களிலே திருவருள் விளக்கம் பெரிதும் அடைதற் பொருட்டுச் சிவாகமத்திலே திருமுறை ஓத ஆணையுள்ளது. வேதத்தைவிடத் திருமுறைப் பண் முழங்கும் தலங்கள் திருவருள் விளக்கம் பெரிதும் உடையது என்பது ஆன்றோர் முடிவு.

திருமுறைகளை ஓதுவதன் குறிக்கோள் குறிக்கத்தக்கது. சைவச் சிறப்பைச் சாலவும் விரித்து, ஏனைச் சமயச் 'சவலை'யைக் காட்டி, திருநீறு, அக்கமணி, ஐந்தெழுத்து இவற்றின் பெருமையைத் தெரிந்து, எல்லா உலகும் ஆன எம்பிரான் திருவடியே நமக்குத் 'தாரகம்' எனப் பலரும் அன்பு செய்து உய்யும் வண்ணம் செய்வன திருமுறைப் பாடல்களேயாகும்.

திருவிளையாடற் புராணம் பாட்டுக்கிரங்கும் சொக்கர் எனப் பாடுகிறது. இடைக்காடரைது தமிழ்ப் பாட்டிற்கு இறைவன் இதயங்கனிந்து - அவர் வேண்டுகோளின்படி வடமதுரை சென்று சொக்கர் தங்கிய வரலாறு தமிழுலகம் அறியாததா? விளை நிலமும், மண்டபமும் கோபுரமும் அமைத்துச் சமர்ப்பித்து, பாண்டியனை இறைவர் தன்னடியவர் பொருட்டு, தமிழ்ப் பாட்டின் பொருட்டு வெறுத்தார் என்றால், திருமுறைஓதுவாரை அவமதிப்பவர் இறைவனுடைய வெறுப்பிற்கு ஆளாவார் என்பதனையும் இடைக்காடனூர் சரிதம் இனிதுரைக்கும்.

திருமுறை நூலில் சிவபெருமான் மிகவும் விளங்கி நிற்கின்றான்; சிவசாந்நித்தியம் மிக அதிகம் திருமுறையிற்றான் உள்ளது என்பதை,

'வேதம் பசு, ஆகமம் பால்' திருமுறை அப் பாலில், உள்ள நெய் என்று பாடும் முகத்தால் பழம்பாடல் ஒன்று தெரிவிக்கின்றது. திருமுறை எவ்வாறு போற்றப்பட்டது என்பதற்கு அந்த நெய்யுவமை சான்றாகின்றது.

திருமுறை நூல்களை அருளிச் செய்த பெரியார்கள் பசு கரணம் நீங்கிப் பதிகரணம் பெற்றுச் சிவமே யானவர்கள். அவர்கள் வாக்கு சிவ வாக்கே என்பதனை,

" பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராங் கொண்ட - பாலன்
மரணந்தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தங்
கரணம் போ லல்லாமை காண் "

எனத் திருக்களிற்றுப்படியார் மொழியும்.

திருமுறையினிடத்துத்தான் சிவபிரானுக்குக் கழிபெருங் காதல் உண்டு. காதலன், காதலியின் வாய்ச்சொற்கு வசமுறுதல் போலச் சிவபிரானும் அடியவர் வாய்ச் சொல்லாகிய திருமுறையிடத்து வசமாகிறார். " மூவர் சொலுந்தமிழ் கேட்குந் திருச்செவி " எனத் தாயுமானவர் பாடுவர்.

திருமுறைகளே திருவருளைக் கொடுக்கும் என நம்பியாண்டார் நம்பிகள் சோழனுக்கு நவில்வார். சிவகரணமுடைய நால்வர் பெருமக்கள் திருவாய் மலர்ந்தருளிய திருமுறைகள் ஆன்மாக்களுக்குப் பிறவிப் பிணி தீர்த்து வீடருளவல்லன. இக்கருத்தை,

" பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோல்தோணி கண்டீர் – நிறையுலகிற்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத்தமிழ் "

என்ற நம்பியாண்டார் நம்பிகளின் பாடல் தெரிவிக்கின்றது

" கேவலஞானக் கிழவன் ஆளுடைப் பிள்ளை நாவரசு பேராரூரன் - அரதனவாக்கியனருந் தமிழ்மூலன் - சீவன்முத்தர் திருவாய் மலர்ந்த - நூல்பல நோய்க்கு நுண்ணிய மருந்தே " என்று சத்திய ஞானபோதம் சாற்றும். எனவே இத்திருமுறைக்கு ஒப்பாகப் பிறநூல் உலகினில் இல்லை.

## தேவாரம் :

தேவாரத்தின் பெருமையைத் திருக்கடைக் காப்புச் செய்யுட்கள் ஒருவாறு உணர்த்தும். அத்திருக்கடைக் காப்பில்லாத செய்யுட்களை, ஓதிய காலம் முதலியவற்றை அறிந்து நாம் ஓதின் உறுபயனை எய்தலாம். இப் பாடல்களை முறை

யுடன் பாடுவோரிடம் நாம் கற்றுக்கொண்டபிறகே திருமுறைப் பாராயணத்தைத் தொடங்கவேண்டும். அரங்கின்றி வட்டாட நினைப்பது அறிஞர்க்கு நகைப்பை விளைவிக்கும்.

### திருமுறை வழிபாடு :

திருமுறை பன்னிரண்டையும் வைத்து முறைப்படி பூசனை செய்து வருவது சைவ மரபு. அம் மரபின் வண்ணம் சைவ சித்தாந்த சபைகள் பல நிறுவி அவை வாயிலாகச் சாத்திர தோத்திர ஞானத்தை மக்கள் அடைய அரும்பணிசெய்து வரல் சைவர்கட்குக் கடமையாகும். நாயன்மார் நட்சத்திர நாட்களில் அவ்வத் திருமுறைப் பாடல் சொல்லிப் பெரிய புராணம் சொல்லி வருவது மரபு.

இன்பமே உருவாய் விளங்கும் இறைவன் வேண்டுதல் வேண்டாமை இல்லாதவனே என்றாலும், திருமுறையிடத்து விருப்புடையான். அஃதில்லாதவிடத்து வெறுப்புடையான். இக் கருத்து, திருக்கானூர்த் திருப்பதிகத்தில் " பவளவண்ணர் தமிழின் நீர்மை பேசிக்கோல நீர்மையது கொண்டார் " எனக் கூறப்படுகிறது. திருமுறையின் பொருள் கண்டார் பத்தி மேலிட்டுத் தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிப் பக்தராகி விடுவார். இதுதான் ஆனந்தம். " ஆனந்தமே தரும் நின் பெருமையில் பெரியது ஒன்றுளதோ ? " என்பார் கருவூரார்.

தேவாரத் திருமுறையில் நாடகத் தமிழும் சேர்ந்திருத்தல் பற்றியே சம்பந்தப் பெருமானுக்கு 'முத்தமிழ்விரகர்' எனப் பெயர் ஏற்பட்டது. சம்பந்தப் பெருமானும் " நடங்கொள் தமிழ் " எனவும், " பாடி ஆடக் கெடும் பாவமே " எனவும், பாடுவார். எனவே, தேவாரங்களை இசையோடு பாடும்பொழுது அவற்றின் பொருளுக்கு ஏற்ப அபிநயம் பிடித்து ஆடுதலும் பொருந்தும் என்பது விளங்குகிறது.

இத்திருமுறையின் பெருமையைத் தமிழர்கள் வெறுஞ்சமயக் கண்ணோட்டத்தோடு பாராமல், வாழ்விக்கும் நூல் என்பதையும் அறிந்து தருமையாதீனம் திருமுறைக்குச் செய்யும் பெரும்பணியில் தாமும் ஈடுபட்டுச் சிறுபணியேனும் செய்து, கரவாடும் வன்னெஞ்சு இன்றி-இரவாடும் பெருமானை மனத்துள் வைத்து மாண்பு கூட்ட வாழ்த்துவோமாக; எல்லாம் அரன் நாமமே சூழ்க; வையகமுந் துயர் தீர்க.

---

# நானும் தானும்

நீதிபதி, கனம். எஸ். மகராஜன் பி. ஏ., பி. எல்.,

தக்காளி விதை துக்கிணி போல் இருக்கும்; மிக மிகச் சிறியது. ஆனால், அதை மண்ணிலே விதைத்து, நீர் பாய்ச்சிக் கொண்டே இருந்தோமானால், அது செடியாக வளர்ந்து, பூத்துக் குலை குலையாகக் காய்க்கத் தொடங்கி விடுகிறது. காயும் பூவும் செடியும் அந்தச் சின்னஞ்சிறிய வித்துக்குள்ளிருந்தா வந்தன?

மண்ணுக்குள் இருக்கும் உப்பையும் நீரையும் தக்காளிச் செடியின் வேர் இழுத்துக்கொள்கிறது. ஆகாயத்திலிருந்து சில வாயுக்களைச் செடியின் இலைகள் வாங்கி உட்கொள்கின்றன. இந்தப் பரிவர்த்தனையால், தக்காளிக்கு லாபம்; அது பருத்துப் பெருகுகிறது. ஜடப் பொருள்களுக்கும் லாபம்; அவை உயிர் பெற்று மேல் நிலையை அடைகின்றன. முன்னம் உயிரற்றிருந்த கல்லும் மண்ணும் காற்றும் நீரும் இப்போது தக்காளியோடு இரண்டறக் கலந்து, தக்காளியாகவே மாறிவிட்டன. இப்படியாக, ஜடப்பொருள்களுக்குத் தீட்சை கொடுத்துக் கைதூக்கி விடுகிறது தக்காளி.

இந்த விந்தையைப் பார்த்தார் ஒரு ஞானி. உயிரற்ற தண்ணீரும் காற்றும், உயிருள்ள தக்காளி விதையைப் பார்த்து, "எங்களையும் உன்னோடு சேர்த்துக்கொள்; எங்களுக்கும் உயிர்ப் பிச்சை கொடு" என்று கேட்பது போல் தோன்றின. ஊனுக்குள்ளே (அதாவது ஜடப் பொருள்களுக்குள்ளே) உயிரை நாடும் ஆசையையும் முனைப்பையும் வைத்தவன் யார்? இறைவனே தான். அந்த ஆசைக்குள்ளே இறைவனல்லவா இருந்து இயங்குகிறான் என்று கண்டார் ஞானி. இந்த முடிவுக்கு வந்த ஞானி இறைவனைப் பார்த்துப் பாடுகிறார்.

"ஊன்தேடும் உயிரேயோ!"

மற்றொரு காட்சி ஞானியின் இதயத்திலே உருவாகிறது. டைபாய்ட் காய்ச்சலிலே இருபத்தொரு நாள் கஷ்டப்பட்ட நோயாளி ஒருவன்; செத்துப் பிழைத்தவன். அவனுக்கு

மறுபடியும் மூன்று வாரம் காய்ச்சல் அடிக்கிறது. உருக்குலைந்து பாயோடு பாயாய், வாலுந்தோலுமாய்க் கிடக்கிறான். கண் பஞ்சடைந்து விட்டது; உற்றார் உறவினரைக்கூட இனங் கண்டுகொள்ள முடியவில்லை. இசை நுணுக்கங்களை ஆய்ந்து அநுபவித்த அவனுடைய காது அடைத்துச்செவிடாகிவிட்டது. மற்ற இந்திரியங்களும் மேற்படி, மேற்படிதான்.

இந்த நிலையில் இருக்கும் நோயாளிக்குத் தக்காளி ஸூப்பை மருத்துவர்கள் கொடுக்கிறார்கள் ; கால் கரண்டி, அரைக் கரண்டியாக. கொஞ்சங்கொஞ்சமாக அவனுடைய உடல் தேறி வருகிறது. பத்து நாட்களில், நண்பர்களை இனங்கண்டு கொள்ளத் தொடங்குகிறான்; ‘ வாருங்கள் ’ என்று உணர்வோடு வரவேற்கிறான்; சங்கராபரண ராகத்தைக் கேட்டு, “ சபாஷ் ” போட ஆரம்பிக்கிறான். என்ன விந்தை இது! அன்று உயிர் மாத்திரம் ஓடிக்கொண்டிருந்த அவனுடைய உடம்புக்குள்ளே, இன்று உணர்வு எப்படி வந்து தொத்திக்கொண்டது ?

யோசனை செய்து பார்க்கிறார் ஞானி; தக்காளி ஸூப் அந்த மனித தத்துவத்தோடு கலந்து, கண்ணுக்கு ஒளியும், காதுக்கு ஒலியும், மனசுக்கு உணர்வும் கொடுத்து விட்டது. அப்படி யானால், உணர்வற்ற தக்காளி உணர்வு பெற்றுவிட்டது என்று தானே சொல்ல வேண்டும்! எப்படிக் கல்லும் மண்ணும் நீரும், காற்றும் தக்காளியை அண்டி உயிர்ப்பிச்சை பெற்றனவோ அப்படியே தக்காளியும் மனிதனை நோக்கித் தவமிருந்து, உணர்வுப் பிச்சையைப் பெற்றுவிட்டது. உயிர் மாத்திரமுள்ள தக்காளி, இப்போது உணர்வு பெற்றுச் சங்கராபரணத்தை அநுபவிக்கக் கற்றுக்கொண்டது. அதற்கு உணர்வுத் தேட்டத் தைக் கொடுத்தவன் யார் ? இறைவனேதான்.

இப்பொழுது தெரிந்துவிட்டது ஞானிக்கு, அந்தத் தேட்டத் துக்குள் இறைவன் இருக்கிறான் என்று.

பாடுகிறார்:

“ ஊன்தேடும் உயிரேயோ,
உயிர்தேடும் உணர்வேயோ! ”

ஊன் உயிரைத் தேடிப் பெற்ற பிறகும், உயிர் உணர்வைத் தேடிப் பெற்ற பிறகும், தேட்டம் விட்ட பாடாக இல்லை; மண் தக்காளியாகி, தக்காளி மனிதனான பிறகும், மனிதன் அதி மனிதனாக விரும்புகிறான். உணர்வைத் தீட்டித் தீட்டி, அண்டத் தையும் பிண்டத்தையும் ஆராய்ச்சி செய்கிறான்; கலைகளை ஆய்கிறான்; ஞான நூல்களை ( மறைகளை )த் தேடியலைகிறான்.

உணர்விலே தெளிவு பெற்ற மக்களை 'வானவர்கள்' என்று அழைத்தார்கள் நம் முன்னோர்கள். மறைந்து கிடக்கும் உண்மைகளை, உணர்வு என்ற பாதாளக்கரண்டி போட்டுத் துழாவுகிறார்களே, அவர்களுடைய தேட்டத்தில் தான் இறைவன் குடியிருக்கிறான்:

"வான் தேடும் மறையேயோ!"

ஆனால், அந்த மறைகளோ செம்பொருளாகிய இறைவனைத் தேடித் தேடி அலைகின்றன. அவ்வாறு தேடச் செய்தவனும் இறைவனே.

"மறைதேடும் பொருளேயோ!"

இப்படியாக, ஞானியின் காட்சியிலே, ஒரு முடிவற்ற ஓட்டப் பந்தயம், தேட்டப்பந்தயம் நடந்துகொண்டிருக்கிறது. இந்தப் பந்தயத்திலே பேரண்டமே கலந்துகொள்ளுகிறது; இறைவனும் கலந்துகொள்ளுகிறான்.

"கள்ளனைப் பிடி, பிடி" என்று கத்திக்கொண்டு ஓடுகிறது மக்கள் கூட்டம். அந்தக் கூட்டத்தின் நடுமத்தியில் இருந்து கொண்டு, "விடாதே, பிடி" என்று கள்ளனும் கத்திக்கொண்டு ஓடுகிறான். இதையும் பார்த்து அநுபவிக்கிறார் ஞானி :

"தான்தேட, ஜகமெலாம் உடன்தேட"

என்று பாடுகிறார்.

இந்தக் காட்சியிலே உள்ளத்தைப் பதித்து வைத்துக் கொண்ட ஞானிக்கு ஒரு பேருண்மை பளிச்சென்று புலப்படுகிறது.

"இந்த ஓட்டப்பந்தயத்தில் ஓடி ஓடி இளைத்தேனே. 'நான்' (ஆணவம்) என்றும், தான் (இறைவன்) என்றும் நினைத்துக் கொண்டல்லவா நான் ஓடுகிறேன்? என்ன மடமை இது! எனக்குள் இருந்துகொண்டு தேடவைப்பவன் அவன் அல்லவா? நான், 'தானை'த் தேடுவதா? நான் வேறு, தான் வேறு?

"...தன்னைத்தான்,
நான்தேடி நான்காண,
நான் ஆரோ, தான் ஆரோ!"

என்று முடிவு கட்டுகிறார்.

டார்வினுடைய பரிணாம நெறி, வாழ்க்கையின் குறுகிய அம்சம் ஒன்றைத்தான் விளக்குகிறது. ஆனால், ஞானியின் பரிணாம நெறியோ, மண்ணையும் விண்ணையும் ஆரத் தழுவிப் பரிபூரணத்தையே விளக்கிவிடுகிறது. பாடல் முழுவதையும் பார்த்தால் இந்த உண்மை தெளிவாகும்.

" ஊன்தேடும் உயிரேயோ,
உயிர்தேடும் உணர்வேயோ,
வான்தேடும் மறையேயோ,
மறைதேடும் பொருளேயோ,
தான்தேட, ஜகமெலாம்
உடன்தேட, தன்னைத்தான்
நான்தேடி, நான்காண
நான் ஆரோ, தான் ஆரோ! "

இதே உண்மையை எக்ஹார்ட் (Eckhart) என்ற ஜெர்மன் ஞானியும் சொல்லுகிறார். இறைவனை வணங்கிக் கொண்டிருந்த போது, இந்தத் தெளிவு அவருக்கு ஏற்பட்டது. "இறைவா, நானா உன்னை வணங்குகிறேன்? இல்லை, நீயே உன்னை வணங்கிக்கொள்ளுகிறாய்." (Am I worshipping Thee, my Lord? No, Thou art worshipping Thyself.) என்று சொன்னார்; இலைச்சுப்போன உரை நடையிலே சொன்னார்.

உள்ளுணர்வோடு உண்மையைக் காணும்போதெல்லாம், அதைப் பாட்டிலே பாடித் தெள்ளேணம் கொட்டுவதே நம் முன்னோர்கள் மரபு. இதே விஷயத்தைத் திருமூலர் எப்படி அநுபவிக்கிறார் என்று பார்ப்போம். " நான் " வேறு, " தான் " வேறு என்று தவறாக நினைத்துக்கொண்டு இறைவனைத் தேட ஆரம்பித்தார் திருமூலர். தேடிக்கொண்டிருக்கும் போது உள்ளிருக்கும் இறைவன், " நான் என்றும் தான் என்றும் இரண்டில்லை " என்பதை அவருக்கு உணர்த்திவிட்டான். அந்தக் கணத்திலேயே, ' நான் ' என்ற நினைப்பு அவரை விட்டு ஒழிந்தது.

" நான்என்றும் தான்என்றும்
நாடினேன், நாடலும்
நான்என்று தான்என்று
இரண்டில்லை என்பதை
' நான் ' என்ற ஞான
முதல்வனே நல்கினன்;
நான்என்று நானும்
நினைப்பொழிந் தேனே. "

என்று வியந்து பாடுகிறார்.

'நான்' என்ற வில்லங்கம் அற்ற பிறகு, வணங்குவதற்கு ஆள் கிடைக்கவில்லை திருமூலருக்கு.

"நான் வரைவற்றபின், யாரை வரைவது?
'நான்' 'அவன்' ஆனபின், யாரை நினைவது?"

என்று சொல்லிக் கொட்டம் அடிக்கிறார்.

பார்ப்பவன் வேறு, பார்க்கப்படும் பொருள் வேறு என்ற் துவைத நிலையிலே, கடவுள் வழிபாட்டுக்கு இடம் இருக்கிறது; இந்த நிலையில், தவமும் தியானமும் அர்ச்சனையும் செய்து கொண்டே இருக்கலாம். இரண்டு தத்துவமும் ஒன்றித்து விட்டால் தவம் ஏது? தியானம் ஏது? அர்ச்சனை ஏது?

ஆணவ மயக்கத்தை இழந்து, பரம்பொருளோடு இரண்டும் ஒன்றும் அறக் கலந்த பிறகு, திருமூலருக்கு இந்த நிலை ஏற்படுகிறது.

"தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தேனே"

என்று கூத்தாடுகிறார். இதுவே பேரின்பநிலை; 'நான்' அற்றுத் 'தான்' ஆகும் நிலை.

## அறிவும் ஆற்றலும்

நல்லவராக இருப்பவர் வல்லவராகவும், வல்லவராக இருப்பவர் நல்லவராகவும் இருப்பார் என்று சொல்லுதற்கு இல்லை. இவ்விரு பண்புகளும் ஒருங்கே உடையவர் சிலரே. வல்லமை உடையோர் நல்லவராயில்லையானால் அவ்வல்லமை பயன்தராது. நல்லவராயிருப்பவர் வல்லவராயில்லை எனில் அதுவும் பயன் விளைக்காது. இவ்விரு பண்பும் திருவருளால் தான் ஒருங்கே அடைய முடியும். அருணகிரிநாதர், 'மனதில் உத்தமனாகி, மதியில் வித்தகனாகி' விளங்கிட அருள் பாலிக்குமாறு ஆறுமுகப் பெருமானை வேண்டுகிறார்.

# பாட்டுக்குள் ஒரு பாட்டு

டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

## 1. சொல்லணிகள் :

சொல்லணிகளுள் ஒன்று காதை கரப்பு எனப்படும். இதனைத் தண்டியலங்காரத்துச் சொல்லணியியல் நூற்பா சித்திர கவிகளுள் ஒன்ருகக் கூறும். அந்நூற்பாப் பின் வருமாறு :

" கோமூத்திரியே கூட சதுக்கம்
மாலை மாற்றே எழுத்து வருத்தனம்
நாக பந்தம் வினவுத்தரமே
காதை கரப்பே கரந்துறைச் செய்யுள்
சக்கரம் சுழிகுளம் சருப்பதோ பத்திரம்
அக்கரச் சுதகமும் அவற்றின் பால "

(தண்டி; 98)

## 1.1. காதை கரப்பு :

காதை கரப் பென்பது, ஒரு செய்யுள் முடியவெழுதி அதனீற்று மொழிக்கு முதலெழுத்துத் தொடங்கி ஒவ்வோ ரெழுத்திடையிட்டுப் படிக்கப் பிறிதொரு செய்யுட் போதுவது ஆகும்.

## 1.2 கரந்துறைப் பாட்டு :

ஒரு செய்யுளிலே பிறிதொரு செய்யுட் சொற்புகாது எடுத்துப் பொறுக்கிக் கொள்ளலாம்படிப் பாடுவது 'கரந்துறைப்பாட்டு' எனப்படும். இதற்குக் காட்டப்பட்ட எடுத்துக்காட்டுப் பின் வருமாறு :-

" அகலல்குற் றேரே யதர மமுதம்
பகர்தற் கரிதிடையும் பார்க்கின் — முகமதிய
முத்தென்ன லாமுறுவன் மாதர் முழுநீல
மைத்தடங்கண் வெவ்வேறு வான் "

இதனுட் போந்த செய்யுள்,

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு "

என்னுந் திருக்குறட் பாவாகும். இக்குறட்பாவை மறைத்து முற்காட்டப்பெற்ற செய்யுள் புனைந்திருக்கின்றமையின் கரந்துறைச் செய்யுள் எனப்படும்

இவ்விரண்டு வகைப் பாட்டுக்களும் பயில்வோர் நுட்ப மதியைத் தூண்டிப் பழஞ்செய்யுளை ஓதி இன்புறுதற்குத் துணை நிற்கும்.

## 2. திருஞானசம்பந்தர் தேவாரம் ஒன்று :

" தாயேயா நோவவா வீரு வெமது நீ
பின்னை வெருவா வருவதொ ரத்தப
வெம்புகல் வேறிருத்தி வைத்திசினிச் சைகவர்
தாவா வருங்கல நீயே "

என்ற செய்யுள் இதற்கு எடுத்துக்காட்டப் பெற்றுள்ளது. இதனுட் போந்த செய்யுள்,

" கருவார் கச்சித்
திருவே கம்பத்
தொருவா வென்னி
மருவா நோயே "

என்பதாகும். இவ்வழகிய திருப்பாட்டுத் திருஞானசம்பந்தர் தேவாரத்துக் காணப்பெறுந் திருப்பாட்டாகும். இத்திருப் பாட்டின் மூன்றும் வரி,

' தொருவா வென்ன '

என்றே இருத்தல் பதிப்புக்களால் உணரப்பட்டதாகும். 'என்று சொல்ல' என்றே உரைப்பகுதியில் உள்ளமையும் கருதத்தக்கது.

## 2.1. பாடவேறுபாடு :

" மதியார் கச்சித், நதி யேகம்பம்
விதியா லேத்தப் பதியாவாரே "

என்பது முதலாகிய பிறபாடல்களில், போற்ற, ஏத்த, என்று என்றே இரண்டாம் வரியில் வருவதால் இத்திருப்பாட்டினும்

'என்ன' என்றிருத்தலே அமைப்பிற்குப் பொருந்துவதாகும். ஆயினும் பாடலைச் சொல்லணியில் எழுதிய ஆசிரியன் தன் பாட்டிற்குத்தக 'என் நீ' என்று மாற்றிக்கொண்டமையை நோக்க வேண்டும். சொல்லணிகள் பலவற்றிற்கும் மூல இலக்கியமாகத் திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் பல வற்றுள்ளும் இவ்வொன்றே தண்டியலங்காரத்து எடுக்கப்பட் டுள்ளது; பிற அனைத்தும் புனையப்பட்ட புதுப்பாட்டுக்களே. எடுக்கப்பட்ட இப்பாட்டும் உதாரணமாக எடுக்கப்படாமை கருதத்தக்கது.

### 3. திருத்தாண்டகங்கள் அனைத்திலும் :

இவ்வாறே திருநாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகங்கள் அனைத்துள்ளும் (2086 – 3066 பாட்டுக்கள்) மூன்று, நான்கு, ஏழு, எட்டாம் சீர்களை நீக்கிவிட்டுப் படித்தால் ஒரு கொச்சகக் கலிப்பா வடிவம் அங்கிருப்பதை அறிய முடியும்; எடுத்துக்காட்டாக,

" மூத்தவனை வானவர்க்கும் மூவா மேனி
முதலவனைத் திருவரையின் மூர்க்கப் பாம்பொன்
றார்த்தவனை அக்கரவம் ஆர மாக
அணிந்தவனைப் பணிந்தடியா ரடைந்த அன்போ
டேத்தவனை இறுவரையில் தேனை ஏனோர்க்
கின்னமுதம் அளித்தவனை இடரை யெல்லாம்
காத்தவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே "

என்ற தாண்டகத்தில் பின்வரும் பாடல்வடிவம் இருத்தலைக் காணலாம்.

" மூத்தவனை வானவர்க்கும் முதலவனைத் திருவரையின்
ஆர்த்தவனை அக்கரவம் அணிந்தவனைப் பணிந்தடியார்
ஏத்தவனை இறுவரையில் இன்னமுதம் அளித்தவனைக்
காத்தவனைக் கற்குடியில் கற்பகத்தைக் கண்ணார "

### 3. 1. பாட்டுக்குள் ஒரு பாட்டு : இருவகை :

இவ்வாறு ஒரு பாட்டை எழுதும் ஆசிரியன் அதற்குள் இன்னொரு பாட்டை உண்டாக்கி அமைக்கும் பாங்கு பழமை உடையதாக – உய்த்துணர்வு பெருக்குவதாக – நுட்பமாகக் காணப்படுகின்றது. தாம் பாடும் பாட்டிலே, தாமே பிறிதொரு பாடலை உள்ளடக்குதலும், தாம்பாடும் பாட்டில் பிறர் பாடிய பாட்டை

உள்ளடக்குதலும் என இரண்டுவகையில் தமிழில் இது காணப் படுகின்றது.

## 3.2. உயிருக்குள் உயிர் – அமைப்போ ?

சொல்லணிகள் மெல்ல மெல்லத் தமிழில் இழந்த இடத்தை இப்போது பெற்று வரத்தொடங்கியுள்ளன. பாட்டுக்குள் ஒரு பாட்டாக உள்ள கரந்துறைச் செய்யுள் கவிஞர்களின் உள்ளத்தில் உள்ள உணர்வின் ஆழத்தைக் காட்டுகின்றது எனலாம். இனிய தேமாங்கனியை உரித்து அதற்குள்ளே கதுப்பைச் சுவைப்பதுபோல அமைந்துள்ளது இது. உயிருக்குள் உயிராக-ஆன்மநாயகனுக உள்ளான் இறைவன் என்பதனை உணர்த்த அப்ப ரடிகள் இவ்வாறே அமைத்தனரோ என்பது சிந்தித்து உணர்தற்குரியது.

---

கடிதம் :

Mi. Pa. Somasundaram
Chief Producer, Southern Region
All India Radio.

3327, Anna Nagar,
Madras 40.

பெருமதிப்புக்கும் அன்புக்கும் உரிய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்குப், பணிவன்பு கலந்த வணக்கங்கள்.

மிகுந்த அன்பு பாராட்டிப் பரிபூரணமான மனநிறைவோடு அனுப்பிய ஆசிச் செய்தியும், ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் நல் வாழ்த்தும் கிடைக்கப்பெற்றேன். மிகுந்த கருணையோடு பாடுவித்த தெய்வ இசைப்பதிகங்களும் ஏற்றிவைத்த விளக்கும் எங்கள் குடும்பத்துக்கு உற்ற துணையாகி ஒளிவீசி எங்களை ரக்ஷிக்கும்.

தவ வாழ்க்கை வாழ்ந்துவரும் தங்கள் ஆசிக்குத் தனிப் பண்போடு கூடிய ஆற்றல் உண்டு. அதைப் பெரிதும் மதிக்கிறேன். அஞ்சலி செலுத்துகிறேன்.

# திருக்கடவூரிலே சங்காபிஷேகம்

## திரு. என். இராமகிருஷ்ண

**அமுதகடேசர் :**

கடவுளுடைய பக்தியினல் காலபயத்தையும் போக்கிவிடலாம் என்பதற்கு மார்க்கண்டேயர் சாட்சி. இறைவன் அருளால் என்றும் பதினுருக இருக்கும் வரம்பெற்ருர் அவர். அவர் காலனுக்கு அஞ்சி இறைவனைச் சரண் அடைய இறைவன் காலனை உதைத்து வீழ்த்தினர். இந்த வீரச்செயல் திருக்கடவூர் என்ற தலத்தில் நடைபெற்றது. அட்ட வீரட்டத்தலங்களுள் இதுவும் ஒன்று

அமுதத்தைக் கடைந்தெடுத்த அமரர்கள் அதனை ஒரு குடத்துள் இட்டு இத்தலத்தில் வைத்து நீராடுவதற்குச் சென்ருர்கள். நீராடிவிட்டு வந்து குடத்தை எடுக்கும்போது, அதை எடுக்க முடியவில்லை. அக்குடத்தினுள் இருந்த அமுதம் இலிங்கஉருவம் பெற்றுத் திகழ்ந்தது. அமரர்கள் அப்பெருமானைப் பூசித்து அமுதம் பெற்று உண்டார்கள். அமுதம் வைத்திருந்த குடத்திலிருந்து தோன்றியமையால் அமுதகடேசர், அமுதலிங்கர் என்ற திருநாமங்கள் இங்குள்ள சிவபெருமானுக்கு வழங்குகின்றன. கடம் என்பது குடத்தின் பெயர். அமுதகடம் வைத்த இடமாதலால் இதற்குக் கடவூர் என்ற பெயர் வந்தது.

திருக்கடவூர் ஆலயம் மிக அழகானது. மூன்றுபிராகாரங்கள் அமைந்தது. ஆலயத்துக்குள்ளே நூற்றுக்கால் மண்டபமும் அதன் கீழ்பால் நந்தனவனமும் முனீஸ்வரர் கோபுரமும் திருக்குளமும் இருக்கின்றன. சுவாமி சந்நிதியில் சங்கு மண்டபம் இருக்கிறது.

**காலசங்காரமூர்த்தி :**

மகாமண்டபத்திற்கு வடக்கே மிகவும் அழகாக அமைந்த சபையில் காலசங்காரமூர்த்தி தென்முகம் நோக்கி எழுந்தருளியிருக்கிருர். அம் மூர்த்தியின் திருக்கரங்களில் சூலமும், மழுவும், பாசமும், முத்திரையும் உள்ளன. அவரால் உதையுண்ட யமன் தலைகீழாக விழுந்துகிடக்கிருன். காலசங்காரமூர்த்தியின் இடப்பக்கத்தில் திருமகளும் கலைமகளுமாகிய சேடியர்களுடன் பாலாம்

பிகை எழுந்தருளியிருக்கிருள். இந்த மூர்த்திக்கு எதிரே யமனுடைய உற்சவமூர்த்தியும் இருக்கின்றது. இந்தத்திருவுருவத்திற்கும் அபிடேக ஆராதனைகள் உண்டு.

அபிராமி பட்டர் :

இந்தத் தலத்தில் எழுந்தருளிய அம்பிகைக்கு அபிராமி என்பது திருநாமம். அம்பிகைக்குத் தனியே திருக்கோயில் இருக்கிறது அபிராமி அன்னையைப்பற்றி அந்தாதி ஒன்று உண்டு. அபிராமிபட்டர் என்ற தேவி உபாசகர் இயற்றியது அது.

அபிராமி பட்டர் அம்பிகையை உபாசித்தவர். எப்பொழுதும் அப்பெருமாட்டியின் தியானமாகவே இருப்பவர். ஒருநாள் தஞ்சையில் இருந்த மகாராஷ்டிரமன்னரான சரபோஜி இத்திருக்கோயிலுக்கு வந்து அமுதகடேசரைத் தரிசனம் செய்தார். பிறகு அபிராமியம்மையின் சந்நிதிக்கு வந்தார். அப்போது அபிராமிபட்டர் சந்நிதியில் தம் கண்ணை மூடிக் கொண்டு அம்பிகையைத் தியானித்தவண்ணம் இருந்தார். மன்னரும், பிறரும். அங்கே வருவதை அவர் உணரவில்லை.

அம்பிகையைத் தரிசித்த சரபோஜி மன்னர் அங்கே இருந்த அபிராமிபட்டரைக் கவனித்தார். மற்றவர்கள் மன்னரைக்கண்டு விலகி மரியாதைசெய்ய அவர் மாத்திரம் கண்ணைத்திறவாமல் தியானத்தில் ஆழ்ந்து இருப்பதைக் கண்டு வியந்தார். அருகில் இருந்தவர்களை, இவர் யார்? என்று கேட்டார் அரசர். அபிராமி பட்டரின் பக்தித்திறத்தை உணராதவர்கள் அவர்கள். ஆதலின் "இவர் வாமமதத்தினர் மது உண்டு மயங்குபவர்" என்று சொன்னூர்கள். சரபோஜி மன்னர் உண்மையை அறிய விரும்பினூர். அபிராமிபட்டரும் தம் தியானத்திலிருந்து விழித்தார். அந்த சமயத்தில் அரசர், "இன்று என்ன திதி?" என்று கேட்டார். தம்முடைய தியானத்தில் ஒளி மயமான சூழ்நிலையில் அம்பிகையின் திருவுருவத்தைக் கண்டு இன்புற்று விழித்த நிலையில் இந்தக் கேள்வி காதில்விழவும் அபிராமிபட்டர் "பௌர்ணமி" என்று சொல்லிவிட்டார். அருகில் இருந்தவர்கள் சிரித்தார்கள். அன்று அமாவாசைக்கு அடுத்த பிரதமை! ஆகவே அரசருக்கு அங்கு உள்ளவர்கள் சொல்லியதே உண்மை என்று பட்டது. அதனுல் சினங்கொண்டு இன்று பௌர்ணமியாயின் மாலையில் பூரண நிலவை நீர் காட்டவேண்டும், இல்லையேல் தகுந்த ஒறுப்புக்கு உரியவராவீர் என்று சொன்னூர் அரசர்.

### அபிராமி அந்தாதி :

சரபோஜி போய்விட்டார். அபிராமி பட்டருக்குத் தம் உணர்வு வந்தது. தாம் பௌர்ணமி யென்று கூறியது தவறென்று பட்டது. ஆயினும் அம்பிகையின் அருள்நிலையிலிருந்து சொல்லியதை எண்ணி மெய்ப்பிக்க எண்ணினர். அம்பிகையின் திருமுன் ஒரு பெரிய குண்டம் வெட்டி அதில் அக்கினியை மூட்டி, அதற்குமேல் நூறுபுரியைக் கொண்ட பெரிய உறியைக் கட்டி அதில் ஏறி அமர்ந்தார். அபிராமி அன்னையின் மேல் ஓர் அந்தாதி பாடத் தொடங்கி ஒருபாடலுக்கு ஒரு புரியாகப் பாடலின் முடிவுதோறும் அறுத்து வந்தார். ஐம்பது பாடல்களுக்கு மேல் பாடிவிட்டார்.

மாலை ஆயிற்று அம்பிகை தன் காதில் உள்ள தோட்டை எடுத்துக் கீழ்த்திசையை நோக்கி விச அது அங்கேச் சென்று பூரண சந்திரனுகப் பிரகாசித்தது. அதைக் கண்டு சரபோஜி மன்னர் ஆச்சரியப்பட்டு அபிராமி பட்டருடைய பெருமையை உணர்ந்து அருகில் வந்து வணங்கி, தம்மை மன்னிக்க வேண்டினர். அபிராமி பட்டர் அம்மையின் திருவருளை வியந்து உருகி அந்தாதி நூறு பாடலையும் பாடி முடித்தார். மன்னர் அவருக்கு சில நிலங்களை வழங்கினர். இத்தகைய தெய்வத்தன்மை வாய்ந்த நூலாக இருப்பதனுல் அபிராமி அந்தாதியைப் பலரும் பாராயணம் செய்கிருர்கள்.

### தலச் சிறப்பு :

இத்தலத்தின் தலவிருட்சம் ஜாதி மல்லிகை அதற்குப் "பிஞ்சிலம்" என்பது வடமொழிப் பெயர். ஆதலால் இத்தலத்திற்கு 'பிஞ்சிலவனம்' என்று பெயர். இத்தலத்துக்கு மூவர் தேவாரமும் திருப்புகழ்ப் பாடல்களும் உண்டு.

இந்த ஆலயம் தருமபுர ஆதீனத்தின் பரிபாலனத்திற்கு உட்பட்டது. கார்த்திகை மாதம் சோமவாரங்களில் இங்கு சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெறும். சுற்றுப்புறங்களிலிருந்து அன்பர்கள் கூட்டம் கூட்டமாக வருவார்கள்.

### சங்காபிஷேகப் பயன் :

இரு நூறு ஆண்டுகளுக்குமுன் தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் பரப்பரையில் வந்த ஓர் அரசர் மகோதரம் என்னும் நோயால் வருந்தினர். அதுபற்றி ஆராய்ந்த சோதிடர்கள் சிவபெருமானுக்கு ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம் செய்தால் நீங்கும் என்றும், அதனையும் திருக்கடவூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அமுதகடேசப் பெருமானுக்குச் செய்வதே

நலம் என்றும் கூறினர். அரசர் அவ்வாறே சங்காபிஷேகத்தை நடத்துவித்து அந்நோய் நீங்கி நலம் பெற்றார். அதனல் மானியங்களும் சில வழங்கினர். இறைவனுக்குப் பலவகை அபிஷேகங்களில் சிறந்தது சங்காபிஷேகம். ஆகவே இச் சங்காபிஷேகத்தை அமிர்தகடேசருக்குச் செய்வது மிகவும் சிறப்பாகின்றது. சங்காபிஷேகத்தால் அறம் பொருளின்பங்களையும் நோய் நீக்கத்தையும் பெறலாம்.

**சங்காபிஷேகச் சிறப்பு:**

சங்குகளில் கங்கை காவிரி முதலிய பலவகைத் தீர்த்தங்கள் கொணர்ந்து நிரப்பப்பெறும் அவற்றில் இருநூற்றைம்பதுக்கு மேற்பட்ட பொருள்கள் சேர்க்கப்பெறுகின்றன. யானையடிமண், கடல் மணல் முதலிய மண் வகைகள், அருகம்புல், குச்சிப்புல், தர்ப்பை, பச்சிலை மூலிகைகள், உலோக வகைகள், நவரத்தினங்கள், தான்யங்கள் முதலியவை அப்பொருள்களாகும்.

ஆயிரத்தெட்டு சங்குகளை வரிசையாகப் பரப்பி, அவற்றின் நடுவில் உள்ள பீடத்தில் பெரிய வலம்புரிச் சங்கை வைத்து வேள்வி முதலியவற்றோடு பூசிப்பார்கள். பிறகு வலம்புரிச் சங்கத்தையும் வேறுசில சங்குகளையும் எடுத்துக்கொண்டு வெளிப்பிராகாரத்தில் வலம் வருவார்கள். பின்பு சங்குகள் கோயிலுக்கு உள்ளே புகுந்து கோயிலை வலம் வந்து உள்ளே செல்லும். சங்குகளில் உள்ள தீர்த்தத்தை இறைவனுக்கு அபிடேகம் செய்வார்கள். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இந்த அபிடேகத்தை மிகவும் சிறப்பாக நடத்தி வைப்பார்கள். மார்க்கண்டேயர் இறைவனுக்கு வலம்புரிச் சங்கால் அபிடேகம் செய்தார் என்பது ஐதிஹ்யம். குங்குலியக் கலய நாயனர் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்ற தலமும் இதுவே. காரிநாயனர் அவதரித்து வாழ்ந்ததும் இத்தலமாகும்.

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

### தருமையாதீனம்

### சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்.

"கானத்தின் எழுபிறப்பாக" மண்ணில் வளர்ந்த ஞானத்தின் திருவுருவை" கண் களிக்கக்கண்டு மகிழ்ந்தோம். இவ் ஆலயத்தைத் தூய்மையுறப் பேணும் சிறப்பைக் கண்டு பாராட்டுகிறோம்.

(Sd.) கருமுத்துதியாகராசன்
ராதா தியாகராசன்.

3—10—73.

கடிதம் :

மறைமலையடிகள் மன்றம்,

புன்செய்ப் புளியம்பட்டி,
கோபி வட்டம்' ஈரோடு வழி,
26—19—73,

"ஞானசம்பந்தம்" இதழில் வெளிவந்த 'திருவருட் பயன் உரை'யை (சி. அருணைவடிவேல் முதலியார்) நூலாக வெளியிடுமாறு வேண்டுகிறோம், மேலும் சிவத்திரு. அருணைவடிவேல் முதலியார் அவர்களைக்கொண்டே எல்லாச் சாத்திர நூல்களுக்கும் உரை எழுதச்செய்யின் எளிய அறிவுடையோரும் பெற்றுப் பயனடைவர். என்போன்ற நிலையில் உள்ளார்க்கு அவை பெரிதும் பயன்படும். அவர்தம் 'சித்தாந்த வினாவிடை'யைப் படித்து நாத்திகர் பலர் ஆத்திகராகி உள்ளனர்.

---

## காதறுந்த ஊசியும் கூட வாராது!

மரணப் படுக்கையில் இருந்தார் மாவீரர் அலெச்ஸாண்டர். சாகப்போகும் அலெக்ஸாண்டரைச் சுற்றியிருந்தவர்கள், அலெக்ஸாண்டர் எதையோ விரும்புகிறார் என்பதை அறிந்து, "என்ன வேண்டும் தங்களுக்கு" என்று கேட்டார்கள்.

"நான் விரைவில் இறந்துவிடுவேன்; என்னைத் தூக்கிச் செல்லும் சவப் பெட்டியிலே என் தோள்பக்கம் இருக்கும் இடத்தில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு ஓட்டை போட்டு வையுங்கள்" என்றார்.

உடனே போய்ச் சவப் பெட்டியில் ஓட்டைகளைப் போட்டுவிட்டு வந்து "ஏன் இப்படிச் சொன்னீர்கள்" என்று அவர்கள் கேட்டார்கள்.

"என் பிணத்தை உள்ளே வைத்து என் இரு கைகளையும் அந்த ஓட்டைகளின் வழியாக வெளியே தொங்கவிட்டுவிடுங்கள். "போகும்போது அலெக்ஸாண்டர் தன் கைகளில் எதையும் கொண்டுபோகவில்லை என்பதை எல்லோரும் பார்க்கட்டும்" என்றார் அலெக்ஸாண்டர்.

எத்தனை வெற்றிகளைப் பெற்றாலும், எத்தனை பணம் காசு சம்பாதித்தாலும் எவராலும் கடைசியில் போகும்போது எதையும் கொண்டுபோகமுடியாது என்பதை உலகுக்கு உணர்த்தவே அலெக்ஸாண்டர் கூறினார்.

நன்றி. —தினமணி தீபாவளி இதழ், 25—10—73

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னாகரம்

**சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்**

(மலர் 32. இதழ் 9. பக்கம் 478 இன் தொடர்ச்சி)

शिवोपयुक्तं स्रग्गन्ध मन्नपानादिकं तथा ।
निवेदितमिति प्रोक्तं सर्वपापहरं परम् ॥
निर्माल्ये षड्विधे भोज्यमेकमेव निवेदितम् ।

இறைவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட புஷ்ய சந்தனம், அன்னம், பானம் முதலியன ஸர்வபாபஹரமாதலால் அதற்கு நிர்மால்யம் என்ற தோஷம் கிடையாது இறைவனுக்கு நிவேதிதம் போஜ்யமாகும். சிவ நிர்மால்யம் கூடாது என்பவர் உபவாசமாகவேதான் இருக்கவேண்டும் எதுவும் சிவ நிர்மால்யம் என்று ஒரு அபியுக்தர் கூறுகிறார்,

गङ्गाऽनङ्गरिपोर्जटा विगळिता यन्मौळिपुष्पं शशी
केशास्तस्यवियत्ततो निपतिता वृष्टिर्जगज्जीवनम् ।
रुद्रोऽग्निः शिव एव सर्व मनव स्वजिह्वया पच्यते
ये निर्माल्यधि हासव त्रिभुवने तैः केनवाजीव्यते ॥

— அபியுக்தர்.

கங்கையானது இறைவனது திருமுடியிலிருந்து விழுந்தது. அதனால் அது சிவநிர்மால்யம், சந்திரன், சிவனுடைய சிரோபுஷ்யம் நிர்மால்யம், ஆகாயம் இறைவனின் கேசம் அதனின்று மழைபெய்து உலகத்தில் பயிர் தான்யம் உண்டாயின. ஆதலால் சர்வ தான்யமும் நிர்மால்யம். அக்னி சிவனின் சரீரம். அதன் நாக்கினால் எல்லா மந்திரங்களும் நக்கப் படுகிறது. ஆகவே எல்லாம் நிர்மால்யமானால் எதை நிர்மால்ய மாக விலக்கி உண்பதற்கு மீதி என்ன தானிருக்கிறது.

— அபியுக்தர்.

गुकारस्त्वन्धकारस्याद्रुकार स्तन्निवर्तकः ।
अन्धकारनिरोधित्वात् गुरुरित्यभिधीयते ॥

கு என்ற அக்ஷரம் அந்தகாரம். ரு என்ற அக்ஷரம் இருளைப்போக்குதல் எனப்பொருள். அஞ்ஞானம் என்ற இருளைப் போக்குபவராய் இருப்பதால் குரு எனப் பெயர் வந்தது.

ஆசாரியன் சர்வசாஸ்திரங்களிலும் தத்துவஞானியாய் சிவசாத்திரமறிந்தவராய் சிவபூஜை, ஆசாரியபூஜை அக்னி பூஜை செய்பவராய் இருக்கவேண்டும். பதினாறு வயதிற்கு மேல் எழுபது வயதிற்கு உள்பட்டவராய் இருக்கவேண்டும். சிகியாகவும் செய்நன்றி மறவாதவனும், ப்ரிய தரிசனனாயும் இருக்கவேண்டும். கிருஹஸ்தன் உத்தமம். பௌதிக ப்ரும்ம சாரியும் ஏற்றுக்கொள்ளக் கூடியது. கிரியை முதல் ஞானம் வரையில் சாத்திரத்தில் நிச்சயபுத்தி உள்ளவனாயிருக்க வேண்டும். — சுப்ரபேதாகமம்.

ஆதிசைவனைக் கொண்டுதான் பரார்த்த பூஜை செய்விக்க வேண்டும். பரார்த்த பூஜையை மற்றவர்கள் செய்தால் அரசருக்கும் ராஜ்யத்திற்கும் அழிவு ஏற்படும். ஜீவனத்தின் பொருட்டு யாதொரு பிராம்மணர்கள் பரார்த்தபூஜை செய்கிறார்களோ அவர்கள் ஆறுமாதத்திற்குள் வீழ்ச்சியடைவார்கள் ஆசாரியாபிஷிக்தனான ஆதிசைவனுக்கு பரார்த்தபூஜையானது தோஷத்தை உண்டுபண்ணாது. — காமிகாகமம்.

ஆன்மார்த்தபூஜை பரார்த்தபூஜை இரண்டும் செய்ய அதிகாரமுடையவர் ஆதிசைவர். — காரணாகமம்.

ஆன்மார்த்தபூஜை :

सूर्योपस्थानमात्मेज्या लिङ्गाग्निगुरुपूजनम् ।
इति नित्यं समाख्यातं षडाधारशिवार्चनम् ॥

சூரியபூஜை, ஆத்மபூஜை, சிவலிங்காராதனம், அக்னி பூஜை, குருபூஜை என்று சிவபூஜையில் ஆறு உட்பிரிவுகள் உண்டு. இவ்வாறு தினம் தினம் செய்யவேண்டும்.

यजनं द्विविधं प्रोक्तमात्मार्थं च परार्थकम् ।
आत्मार्थं चलमित्युक्तं परार्थं स्थिरलिङ्गकम् ॥
स्वगृहे च शिवक्षेत्रे स्वेष्टदेशे मनोरमे ।
संस्थाप्य विधिनालिङ्गं स्वात्मनो हितकांक्षया ॥
यावज्जीवं स्वहस्तेन पूजितं स्वेष्टलिङ्गकम् ।
आत्मार्थमिति विज्ञेयं साक्षात्कैवल्य दायकम् ॥

— कारणागमम्

ஆன்மார்த்தபூஜை, பரார்த்தபூஜை என இரண்டுவித பூஜையினுள் ஆன்மார்த்த லிங்கம் சரமாகும் பரார்த்தலிங்கம் ஸ்திரமாகும் ஆன்மார்த்த பூஜையானது தன்னுடைய வீட்டில், சிவக்ஷேத்திரத்தில், மனோகரமான தனக்கு விருப்பமுள்ள விடத்தில், தன்னுடைய நன்மையின் பொருட்டுச் செய்யப் படும் பூஜை, இதை உயிருள்ள வரையில் தனது கையாலேயே பூஜிக்கவேண்டும். — காரணாகமம்.

சலலிங்கம் என்பது ஸ்படிகம், க்ஷணிகம் (12), சைலம், பாணம், லோஹஜம், என்பவைகள். — சுப்ரபேதம்.

ஆசாரியனால் கொடுக்கப்பட்டபடி லிங்கத்திலோ, ஸ்தண்டிலத்திலோ, மண்டலத்திலோ, தோயத்திலோ, க்ஷணிகத் திலோ, ஆன்மார்த்த பூஜையைச் செய்யவேண்டும்.

ஸ்னான சந்தியாநுஷ்டானம் முதலியன செய்துகொண்ட ஆசாரியன், சூரியபூஜை முதலாகக் கொண்டு சிவபூஜையைச் செய்யவேண்டும்.

सकलस्सूर्यरूपस्तु निष्कलश्शिव एव च ।
देहस्थं पूर्वमाराध्य पश्चाद्देवं यजेत्बुधः ॥

— अंशुमान्

சகளமூர்த்தி சூரியன், நிஷ்களமூர்த்தி சிவன், ஆதலால், தேஹத்துடனிருப்பவரை முதலில் உபாசித்துப்பின் நிஷ்கள மூர்த்தியை உபாசிக்கவேண்டும். — அம்சுமான்.

भुभुक्षुश्च मुमुक्षुश्च सकृन्नित्यं प्रपूजयेत् ।

— षट्सहस्रिका

புபுக்ஷுவாயினும், முமுக்ஷுவாயினும் தினம் சிவபூஜை செய்யும் முன்பு சூரியபூஜை செய்யவேண்டும்.

— ஷட்சஹஸ்ரிகா.

தன்னை அஸ்திரமயமான கூண்டிற்குள் இருப்பவனாகப் பாவித்து. பிருவிதத்துவம் முதல் மாயா தத்துவம் வரையிலுள்ள முப்பத்தொரு தத்துவங்களை மனதினால் கடந்து சுத்த வித்யா தத்துவாந்தம் வியாபித்துத்தான் சிவபூஜாஸ்தானத்தை அடைந்ததாக எண்ணி சூரியனைப் பூஜிக்கவேண்டும். சூரிய மூலத்துடன் அங்கமந்திரங்களால் கரநியாஸம் அங்கநியாஸம் செய்துகொண்டு சிவப்பான அக்ஷதை சந்தனம் புஷ்பத்துடன் கூடிய அர்க்கிய ஜலத்தில் தனது நெற்றியின் மத்தியில் ப்ரகாசிக்கின் அருணபிந்துவினின்றும் பெருகின்ற அமிருத தாரையால் நிறைத்து பீஜத்துடன் கூடிய வஷோல்கி மந்திரத்தினால் அபிமந்த்ரணம் செய்து அஸ்திரம் கவசம் இவைகளால் ரக்ஷை அவகுண்டனம் செய்து தேனுமுத்ரை காண்பித்து அந்த ஜலத்தினால் திரவியம் ஆத்மா யாவற்றையும் புரோக்ஷிக்கவேண்டும் பிறகு அஷ்டதள பத்மத்தில் சூரியனை உபாசிக்கவேண்டும்.

தண்டி, பிங்களன், கணபதி, குரு இவர்களைப் பூஜித்து, ச்வேதபீடமயமான ப்ரபூதாசனத்தையும், அதன் சுற்றிலும் ஆக்னேயம் முதலிய நான்கு கோணங்களிலும், விமலன், சாரன், ஆராத்யன், பரமசுகன் என்பவர்களையும் பூஜித்து மத்தியில் பத்மத்தைப் பூஜிக்கவேண்டும்.

அந்த பத்மதளத்தில், கிழக்கு முதலிய தளங்களில் தீப்தா, சூக்ஷ்மா, ஜயா, பத்ரா, விபூதி, விமலா அமோகா, வித்யுதா, என்ற எட்டு சக்திகளையும் கர்னிகையின் ஈசானத்தில் சர்வதோமுகி என்ற சக்தியையும் பூஜிக்கவேண்டும். விஸ்புரமுத்ரை அளித்து ஆஸனமூர்த்தி மூலமாக சூரியனைப் பூஜித்து, அர்க்கியம் கொடுத்து பத்மமுத்ரை காட்டி லயாங்க பூஜை செய்து போகாங்க பூஜை செய்யவேண்டும்.

ஹிருதயம் சிரசு, சிகை, கவசம் இவைகளுக்கு தேனு முத்திரையும், நேத்ரத்திற்கு கோவிஷண முத்திரையும் அஸ்திரத்திற்கு த்ராஸநீ முத்திரையும் கொடுக்கவேண்டும்.

( தொடரும் )

[ 644-ஆம் பக்கத் தொடர்ச்சி ]

தாயினும் நல்ல பெருமாளான இளங்கோ வேளார் என்பவரைக் குறிப்பிடுகிறது. (A. R. E. No. 504 1918) இவன் மனைவியும் மாத்தூரில் தலைவன் அரையன் உதையஞ் செய்தார் மகளும் ஆன திருவெண்காட்டு நாச்சியாருக்காகத் திருவிளக்கு முதலான தருமங்கட்குக் கொடை தரப்பெற்றதைக் கல்வெட்டுக் கூறுகிறது.

## தாயினும் நல்ல பெருமான் திருநீற்று வீரமாகத சோழன் :

கோப்பெருஞ்சிங்கனுடைய முப்பத்தொன்றும் ஆண்டில் திரு அண்ணாமலை உடையார்க்குத் திருநீற்று வீரமாகத சோழன் சந்திக்கும் திருப்பணிக்கும் தச்சூர் நான்கு எல்லைக்கு உட்பட்ட நிலம், முன்னைய தேவதானம் முதலியன நீக்கி இறையிலியாக வாணகோவரையன் தாயினும் நல்ல பெருமாள் திருநீற்று வீரமாகத சோழன் என்பவன் தந்துள்ளான். (South Indian Inscriptions Vol. No. VIII No. 75 ARE No. 489 of 1902) இந்த தச்சூர் வீரமாகத சோழநல்லூர் எனப்பட்டமையாலும் இவ்வாணகோவரையன் தாயினும் நல்ல பெருமாள் என்ற பெயர் உற்று உள்ளமையாலும் இவன் திருமுறையில் கொண்டிருந்த இணையில்லாப் பேரன்பு புலன் ஆகும்.

## தாயினும் நல்ல பெருமாள் முனையதரையன் :

சிதம்பரம் நந்தி மண்டபத்தே பனசையாருடையான் ஆதித்தன் வல்லையன் என்பவனைப் புகழ்ந்த ஆறு பாடல்கள் ஒரு கல்வெட்டாக அமைந்துள்ளன. (A. R. E. No. 329 of 1963) இப்பாடல்களைப் புவனேசுவரன் தொண்டைமானான தாயினும் நல்ல பெருமாள் முனையதரையன் என்பவன் பாடியுள்ளான். புவனேசுவரன் என மாறவர்மன் விக்கிரம பாண்டியன் குறிக்கப்பெறுவான் என்பதனைப் 'புலியூர் நடங் கண்ட புவனேசுவீரா' (S. I. I. Vol. 4 Ins. No. 228) என்பது போன்ற பல சாசனங்களால் (A. R. E. No. 122 of 1890) 73 of 1913) அறியலாம். 'புவனேசுவீரன் விக்கிரம பாண்டியனின் படைத்தலைவனே இவர் பாடினர்' எனவும், 'முனையதரையன், தொண்டைமான் என்ற இவர் பட்டங்கள் இவருடைய பெரும் புலமையைக் காட்டும்' எனவும், சாசனத் தமிழ்க் கவி சரிதம் கூறும்.

முடிப்புரை :

மனிதருள் அன்பு செலுத்துவதில் தலையானவள் தாய். தாய் தலையன்பிலும் குணமாறுபாட்டால் சில குறைபாடுகள் தோன்றும் ; தாயினும் சாலப் பரிந்து காப்பவன் - நாயினும் இழிந்த நமக்கும் அருள்பவன் சிவபெருமான். அதனால்தான் தாயினும் நல்ல தயாபரன்-தாயினும் நல்ல தலைவர்-தாயினும் நல்ல சங்கரர் - தாயினும் நல்லன், எனத் திருமுறைகள் கூறுகின்றன. மக்கள் இவ்வுண்மையை உணர்ந்து - இக்கருத்தில் ஆய்வும் தோய்வும், காரணமாகத் தாயினும் நல்ல சோழீச்சுரம் எனக் கோயிலுக்குப் பெயரிட்டனர். தாயினும் நல்லபுரம் என ஊருக்குப் பெயரிட்டனர். மக்கள் தாயினும்நல்லபெருமான் எனத் தாமே பெயராகச் சூடிக் கொண்டனர். திருமூலர் வாக்கில் தோன்றிய தாயினும் நல்லன் என்ற கருத்து, திருமூலர் திருவாக்கில் முகிழ்த்துத் தேவாரத்தில் மலர்ந்து, திருவாசகத் தேனைச் சிந்தி மக்கள் மத்தியிலே கோயிற்பெயராக - மக்கள் பெயராக எல்லாம் தெய்வமணம் பரப்பிற்று. தற்காலத்தும் தேவாரத் திருமுறைச் சொற்றொடர்களைப் போற்றத் தலைப்படுவோமாக.

---

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sivalogathiyagarajaswamy Devasthanam, Achalpuram.

I am very happy to visit the temple and I take the opportunity to my gratitude to all temple authorities and officials who allow me such a visit. The temple is very peacefull place which invites to deep meditation.

(Sd ) F. Mutin,
France.

8—8—73.

உ

குருபாதம்

# "அண்ணமலைக்கு அரசே!"

## புலவர் திரு. இரா. செல்வக்கணபதி

ஆணவத்தால் தம்மை அரியரெனச் சொன்னர்கள்
நாணத்தால் தலைகவிழ நாயகமே செய்திட்டாய்!
மாணமிகப் படித்து மற்றவர்க்குச் சொன்னலும்
ஆணவத்தில் கடுகேனும் அகற்றும் வலியில்லேன்! 1

காரிட்ட ஆணவக் கருவறையில் தீக்கொளுவ
பேரிட்ட நாயகமே பெருந்தீயாய் வளர்ந்திட்டாய்!
ஆரிட்ட சாபம் அறியேன் விரித்துரைத்தும்
நேரிட்ட ஞானம் நீகழ்த்தும் வலியில்லேன்! 2

உண்ண முலையாளோ டுயர்ந்தாய் எமைக்காக்கும்
அண்ண மலைக்கு அரசே என்! ஆரமுதே!
கண்ணல் கண்டும் கருத்தில் உணர்ந்திருந்தும்
பெண்மை தனைப்போற்றும் பெரிய வலியில்லேன்! 3

வந்தவர்க்குச் செல்வம் வழங்கிச் சுடுகாட்டில்
தொந்தமிடும் நின்றன் தொண்டன் என நின்றும்
இந்தா எனச்சொல்லி ஈயும் நினைவின்றி
அந்தோ அலைகின்றேன்; அரசே வலியில்லேன்! 4

கற்றேன்; அறிந்தேன்; கனிவாய் எடுத்துரைத்தேன்;
அற்றேன பாசம்? அழுக்கைக் களைந்தேன?
முற்றே! ஞான முழுமணியே! என்னுயிரே!
கற்ற அனுபவங்கள் கனிய அருள்வாயே. 5

# செய்திகள்

## தருமையில்

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜை விழா

தருமையாதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பரிபூரணம் எய்திய இரண்டாவது ஆண்டுக் குருபூஜை விழா 19—10—73 வெள்ளிக்கிழமையன்று தருமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் காசியில் பரிபூரணம் எய்தியதன் நினைவாகக் காசி ஸ்ரீ விசுவேசர் ஆலய அமைப்பில் வடிவமைத்துத் தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்த பரவசர் பூங்காவில் அமைக்கப்பெற்ற அவர்களது குருமூர்த்த ஆலயத்தில் காலை மாலை இருவேளைகளிலும் விசேட அபிடேக ஆராதனைகள் நடைபெற்றன.

தருமையாதீனம் 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் குருமூர்த்த வழிபாட்டிற்கு எழுந்தருளி விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்த்துவித்து அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கியருளினார்கள். காலையிலும் - மாலையிலும் நடைபெற்ற சொற்பொழிவு நிகழ்ச்சிகளில், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளனுபவங்கள் பற்றியும், தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிச்செய்த சாத்திர-தோத்திர நூல்கள் பற்றியும் விரிவுரைகள் நடைபெற்றன. மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், செஞ்சொற்கொண்டல் டாக்டர், திரு. சொ. சிங்காரவேலன் முதலியோர் உரை நிகழ்த்தினர்,

நண்பகல் மாகேஸ்வரபூஜை சிறப்பாக நடைபெற்றது.

மாலையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். வழிபாட்டிற்குப்பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களிடையே அருளுரை வழங்குங்கால் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளனுபவங்களையும், அவர்களது பண்பு மேம்பாட்டு நலங்களையும் விளக்கியருளி திருவருட் சிறப்பையும் - குருவருள் மேம்பாட்டினையும் உணர்த்தியருளினார்கள்.

இரவு யாழ்ப்பாணம், ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் "ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி" என்ற தலைப்பில் இன்னிசைக் கதை நிகழ்த்தினர்கள். விழா மலராக ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அவ்வப்போது "ஞானசம்பந்தம்" இதழுக்கு வழங்கியருளிய அருளுரைகளின் ஐந்தாம் தொகுதி "செந்தமிப் பூம்பொழில்' என்ற பெயரில் வெளியிடப்பெற்றது. காலை மாலை இருவேளையிலும் திருமுறைப் பாராயணம் ஓதுவா மூர்த்திகளால், இன்னிசைக்கருவிகளின் துணையோடு சிறப்பாக நிகழ்த்தப்பெற்றது.

மாயூரத்தையும் அதனையடுத்த சிற்றூர்களையும் சார்ந்த அன்பர்களும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் கயிலைக் குருமணி அவர்களின் திருவடிகளில் அன்பு பூண்டவர்களுமாகிய நூற்றுக்கணக்கான அன்பர்கள் குருபூஜை விழாவில் கலந்துகொண்டு வழிபட்டுக் குருவருள் பெற்றனர்.

காசியம்பதியில்

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜை

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பரிபூரணம் எய்திய காசியம்பதியிலும் குருபூஜை விழா சிறப்பாக நடந்தேறியது. ஸ்ரீ கேதாரநாதர், ஸ்ரீ விசுவநாதர் திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. நண்பகல் சாதுக்களுக்குப் 'பண்டாரா' எனப்படும் அன்னம்பாலிப்பு நடைபெற்றது.

வேலூரில்

## ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிகந்தசஷ்டிவிழா

வேலூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமி கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு 27-10-73 முதல் 1—11—73 முடிய உள்ள விழா நாட்களில் முருகப் பெருமானுக்கு விசேட அபிடேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன.

இதனை ஒட்டி நடைபெற்ற சொற்பொழிவு நிகழ்ச்சிகளில் கந்தபுராண விரிவுரையும் - முருகன் அருள்நூல்களின் விரிவுரையும் நடைபெற்றன. திரு மு. சுந்தரேசம் பிள்ளை, திரு சு. தண்டபாணிதேசிகர், திரு இரா. செல்வக்கணபதி, டாக்டர் திரு.

சொ. சிங்காரவேலனர். திரு கி. இராமநாத ஆசாரியார், திரு வை. மு சண்முக தேசிகர் முதலானோர் முறையே நாள்தோறும் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தினர். ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்களும் முருகன் அருள்பற்றி உரையாற்றினர்.

### தருமையாதீனம் மாயூரம் - குமரக்கட்டளையில்

## கந்தசஷ்டி விழா

மாயூரம் - குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் 27—10—73 சனிக்கிழமை முதல் 1—11—73 வியாழக்கிழமை வரை கந்தசஷ்டி விழா சிறப்பாக நடைபெற்றது. நாள்தோறும் ஸ்ரீசுப்பிரமணிசுவாமி திருவீதிவுலாக்காட்சி நிகழ்ந்தது. நாள்தோறும் மாலை 6 மணி அளவில் சொற்பொழிவுகள் நிகழ்வுற்றன. தருமையாதீனக் கல்வி நிலைய ஆசிரியப் பெருமக்களும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., அவர்களும் கந்தபுராண விரிவுரையாற்றினர். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர்கள் முருகனருளை விளக்கும் பிள்ளைத்தமிழ் பற்றிய பல்வேறு தலைப்புக்களில் சொற்பெருக்காற்றினர். அன்பர்கள் சொற்பொழிவுகளைக்கேட்டும் திருவீதிவுலாக் காட்சியைக் கண்டும் பயன் பெற்றனர்.

### திருப்பெண்ணாகடத்தில்

## ஸ்ரீ மெய்கண்டார் குருபூஜை விழா

சந்தானசாரியருள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனர் குருபூஜை விழா 25, 26—10—73 ஆகிய இருநாட்களும் திருப்பெண்ணாகடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இரு நாட்களிலும் திருமுறைப் பாராயணம் நிகழ்ந்தது.

25—10—73 மாலை விழாவில் திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராசப்பிள்ளை பி, ஏ., அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினர்கள். காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீனம் சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையுரை நிகழ்த்தினர்கள். ஸ்ரீ மெய்கண்டதேவநாயனர் வரலாற்றை யாழ்ப்பாணம் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இன்னிசைச் சொற்பொழிவாக நிகழ்த்தினர்கள்.

26—10—73 காலை விழாவில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப்பேராசிரியை வித்துவான் திருமதி. ப. நீலா 'சிவஞான

போதத்தில் பதியியல்பு' என்பது பற்றியும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.. 'சிவஞானபோத முழு விளக்கம்' என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர். காலையில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின்வண்ணம் "சிவஞானபோதம்" என்ற நூல் ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனர் திருவடிகட்குக் காணிக்கையாக்கி வெளியிடப்பட்டது.

26—10—73 மாலை விழாவில் திரு. எஸ். சோமசுந்தரம் பி.ஏ., பி.எல்., (பிரின்ஸிபல் சப் ஜட்ஜ் சேலம்) தலைமையேற்றார்கள். செஞ்சொற்கொண்டல், டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ, பிஎச். டி., 'சிவஞானபோதத்தில் பசு இயல்பு' என்னும் தலைப்பிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் திரு. இரா. செல்வக்கணபதி 'சிவஞானபோதத்தில்பாசஇயல்பு' என்னும் தலைப்பிலும் விரிவுரை நிகழ்த்தினர்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றி ஆசியுரை வழங்கியருளினர்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருட்கொடையாக, 'சிவஞானபோதம்' கல்வெட்டுப் படிமமாக அமைக்கப்பட்டு, என்றும் நின்று நிலவ ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனர் திருக்கோயிலில் அமைக்கப்பட்டது.

குருபூசைத் திருவிழாவில் பெண்ணாகடம் அன்பர்கள் மிக்க ஆர்வத்துடன் கலந்துகொண்டு திருவருளும் குருவருளும் பெற்றனர்.

தருமையாதீனம், சென்னை சமயப் பிரசார நிலையத்தில்

## நவராத்திரி விழா

தருமையாதீனம் சென்னை சமயப் பிரசார நிலையத்தில் 27—9—73 முதல் 6—10—73 முடிய நவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. காஞ்சிபுரம் தொண்டை மண்டலாதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் விழாவைத் தொடங்கி வைத்தார்கள். இரண்டாம் நாள் திரு. S. சிவகுருநாதன் B. A., B. L., அவர்களும், மூன்றும் நாள் சென்னை அறநிலைய ஆணையரின் நேர்முக உதவியாளர்

திரு. கே. இராஜா B. A., B. L. அவர்களும், நான்காம் நாள் திரு. K. E. அருணாசல முதலியார் அவர்களும் ஐந்தாம் நாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி. கனம் திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும், ஆறும் நாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கனம் திரு. S. நடராஜன் அவர்களும், எட்டாம் நாள் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களும், ஒன்பதாம் நாள் "தினமணி" உதவி ஆசிரியர் திரு. கருப்பையா அவர்களும் தலைமையேற்றுச் சிறப்பித்தார்கள்.

மாயூரம், பிரம்மஸ்ரீ M. இராமநாத தீட்சிதர் அவர்கள் அம்பிகையின் அருளை விளக்கும் வகையில் பல்வேறு தலைப்புக்களில் விரிவுரை யாற்றினார்கள். அன்பர் பலர் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

## வேளூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

18—9—73 அன்று வேளூர்க்கிருத்திகைப் பிரசாதம் வழங்கு விழா, 'தினமணி' உதவி ஆசிரியர் திரு. கருப்பையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று நந்தனாரின் குருபூஜையை முன்னிட்டு யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்துவிக்கப்பெற்றது. அன்பர்கட்குக் கிருத்திகைப் பிரசாதம் வழங்கப் பட்டது.

16—10—73 அன்று திரு. S. சுப்பிரமணியம் I. T. O. அவர்கள் தலைமையில் வேளூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கு விழா நிகழ்ந்தது. திரு. அ. ஞானப்பிரகாசம், திரு ந. இராமலிங்கம் ஆகியோர் தேவாரம், திருப்புகழ் பாராயணம் நிகழ்த்தினர். விழா முடிவில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கப்பட்டது. அன்பர்கள் பெற்று அணிந்து பயன்பெற்றனர்.

## திருமுறை வகுப்பின் ஆண்டுவிழா

பத்மஸ்ரீ V. வைத்தியநாத சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தலைமையில் 6—10—73 அன்று திருமுறை வகுப்பின் 20 ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வுற்றது. யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் பங்கேற்று வரவேற்புரை நிகழ்த்தினர்கள். திரு. R. சிவஞானம் செட்டியார் அவர்கள் நன்றி கூறினர்.

சென்னை, சமயப்பிரசார நிலையத்தில்

## கந்தசஷ்டி விழா

27—10—73 முதல் 1—11—73 முடிய ஆறு நாட்கள் கந்த சஷ்டி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

முதல்நாள் சென்னை வழக்கறிஞர் திரு. T. V. விசுவநாதையர் அவர்களும், இரண்டாம்நாள் திரு. C. R. இராமசாமி அவர்களும், மூன்றும்நாள் திரு. S. P. சுப்பிரமணியம் அவர்களும், நான்காம்நாள் திரு. V. N. ஆறுமுகம் B. Com., F. C. A., அவர்களும், ஐந்தாம்நாள் திரு. B. C. இலிங்கம் அவர்களும், ஆறும் நாள் திரு. V. இரத்தின முதலியார் B. A. B. L., அவர்களும் தலைமை வகித்தார்கள். நாள்தோறும் மாயூரம் பிரம்மஸ்ரீ இராமநாத தீட்சிதர் அவர்கள் கந்தபுராண விரிவுரை நிகழ்த்தினார்கள். அன்பர்கள் பலர் கேட்டுப் பயனடைந்தனர்.

கூ. கவுண்டம்பாளையம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் இறைபணி மன்றம்

கோவையை அடுத்த கூ. கவுண்டம்பாளையம் ஸ்ரீ குருஞான சம்பந்தர் இறைபணி மன்றத்தின் சார்பில் 2—11—73 இல் கந்த சஷ்டி திருக்கல்யாண விழா, சிறப்பாக நடைபெற்றது தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளுரை யோடு கூடிய 'சண்முக கவசம்' விழாவில் வெளியிடப்பெற்றது. நீலகிரி மாவட்ட அடியார் திருக்கூட்டத்தார் இரவு முழுதும் முருக நாம பஜனை நிகழ்த்தினர். விழாத் தொடர்பாக நிகழ்ந்த சமயப் பேரவையில் அன்பர்கள் பலர் கலந்துகொண்டு முருகப் பெருமானின் அருள் நலத்தை விரித்துரைத்தனர். இம்மன்றத்தின் இயக்குநர்களாக விளங்கும் திரு. பழநியப்பன், திரு பால சுப்பிரமணியன் முதலியோர் நூல்வெளியீட்டிலும் விழாஏற்பாடுகளிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டு ஆவன செய்திருந்தனர். இவ்வினியவிழாவில் அன்பர்கள் பலரும் திரளாகக் கலந்து கொண்டு முருகப்பெருமானின் திருவருளைப்பெற்று இருமைப் பயனும் எய்தினர்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

**திரு. K. முத்துஜோதிடர்**

( பிரமாதீசஹு கார்த்திகைமீ 1உ முதல் 30உ முடிய )

( 16—11—73 முதல் 15—12—73 முடிய )

பிரமாதீச வருஷம் கார்த்திகைமீ 1உ உதயாதி ஸ்ரீ சூரிய பகவான் மகர லக்னத்தில் கார்த்திகை மாத பிரவேசம் செய்கிறார். அதன்பலன் புஷ்ய நக்ஷத்திர பிரவேசம். பிரவேச காலத்தில் குரு மகரராசியிலும் சந்திரன் கடகத்தில் ஜல ராசியிலும் இருவரும் ஜலராசியிலிருந்து பார்த்துக்கொள்வதால் தக்ஷிண பாரத பூமியில் அதிக மழை காத்து இருக்கும் பாப பூமிகளில் சேதமும் இயற்கைக் கோளாறுகளும் இருக்கும். புண்ணிய பூமிகள் செழிக்கும். தனதான்ய விருத்தியாகும். ஒன்றும் கெடுதல் வராமல் இருப்பதற்குத் தேசங்களில் பிருதுவி சாந்தி, ஆவஹந்தீ ஹோமம் அன்ன பூர்ணஹோமங்கள் செய்து கொள்ள சுபிக்ஷம் ஏற்படும்.

**1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஆரம்பித்த காரியங்கள் பூர்த்தியாகும். ஜீவனம் ஓங்கும். ஸ்தாவர ஜெங்கம சொத்துக்கள் சேரும். உலகத்தில் கீர்த்தி உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

**2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½**

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். எப்பொழுதும் அலைச்சலும் காரியங்களில் இடையூறுகளும் ஸ்வல்பமான நஷ்டமும் ஏற்படும். வைத்திய செலவு ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

### 3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். மனதிற்குக் கஷ்டமான செய்திகள் வரும். வீண் அலைச்சல் ஏற்படும். புதிதான வஸ்திர ஆபரணங்கள் சேரும். வியாதி குணமடையும். செவ்வாய், புதன் சுபமாகும்.

### 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும், சுபமான பலனைத்தரும். சஸ்யங்கள் தான்யங்கள் விருத்தியாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். அனுவசியமான அலைச்சல்களும், மனக்குழப்பமும், குடும்பத்தொல்லைகளும் ஜீவனத்தில் மாறுதல்களும் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

### 6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமாகவே இருக்கும். மேலோர் பெரியோர்களுடைய அன்பும் ஆதரவும் ஏற்படும். வம்ச விருத்தி உண்டாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

### 7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். அதிகமான அலைச்சலும் புதிதாக சில காரியங்களில் ஈடுபடுதலும் தன தான்ய விருத்தியும் வியவகாரத்தில் வெற்றியும் ஏற்படும். செவ்வாய், புதன் சுபமாகும்.

### 8. விருச்சிகம் - விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமாகும். தேவதா குரு பிரார்த்தனையின் பலத்தால் சகலமான காரியங்களும் நடக்கும். பிரதிஷ்டா பலன்களும் ஏற்படும். குடும்பத்தில் மங்களகரமான காரியங்கள் நடக்கும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப சுகம் அதிகமாகும். புத்திராதிகளால் விசேஷ நன்மை ஏற்படும். இடம் மாறுதலோடு ஜீவனசுகம் ஏற்படும். சனி, ஞாயிறு சுப மாகும்.

10. மகரம்-உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுப பலனைத்தரும். இடம் மாறுதல் உண்டாகி கிரகசுகம் ஓங்கும். உத்தியோகத் தில் உயர்பதவி கிடைக்கும். மேலோர் பெரியோர்களின் அன் பினல் சகலமும் சாத்தியமாகும். ஆரோக்யம் உண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் $\frac{1}{2}$-சதயம் –பூரட்டாதி–$\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். ஜீவனத்தில் பலவிதமான மாறுதல்கள் ஏற்படும். எதிர்பார்த்து நடக்காமல் இருந்த சில சுபமான காரியங்கள் நடைபெறும். படிப்பு விருத்தி அடையும். புதன், வியாழன் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத் தரும். வரவு செலவு சமமாகும். அடிக்கடி சஞ்சாரங்கள் இருந்துகொண்டு இருக்கும். தெய்வீகமான காரியங்கள் நடந்துகொண்டு இருக் கும். உலகத்தில் பிரசித்தி ஏற்படும். கீர்த்திபத்திரம் கிடைக் கும். சுபம் உண்டாகும்.

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

### ஸ்ரீ உக்தவேதீஸ்வரசுவாமி தேவஸ்தானம், குத்தாலம்.

எங்களுடைய குறுகியகால சுற்றுலாவில் தரிசித்துவந்த கோயில்களில் இன்று தரிசித்த திருத்துருத்தி ஸ்ரீ உக்தவேதீஸ் வர சுவாமி கோயில் எங்களை எல்லாவகைகளிலும் ஈர்த்தது. இந்தக் கோயிலிலுள்ள மூர்த்தியை தரிசித்ததில் நாங்கள் மட்டி லாத பேறுபெற்றோம். * * *

(Sd.) S Ramanathan,
Inspector of Excise,
Coimbatore.

(ஒ-ம்.) M. Palaniappan,
Balasubramanian Foundy
Patel Road, Coimbatore - 9.

உ
சிவமயம்

“ஞானசம்பந்தம்”

# முப்பத்திரண்டாம் ஆண்டுமலர்ப்

## பொருளடக்கம்


| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 1 | அட்டைப்பட விளக்கம் | 99, 387, 462, 638 |
| 2 | அடியால் அளக்கலாமா? | 90 |
| 3 | அண்ணாமலைக்கு அரசே! | 679 |
| 4 | அப்பர்சுவாமிகள் குருபூஜை விழா | 230 |
| 5 | அப்பரடிகளின் மதமாற்றம் | 290 |
| 6 | அப்பர் வகுத்த இலக்கிய மரபுகள் | 560, 593 |
| 7 | அரட்டு | 491 |
| 8 | அருமையில் எளிய அழகு | 319 |
| 9 | அருள்நந்திசிவத்தின் அருளுள்ளம் | 122, 175 |
| 10 | அருள்மொழியில் ஐந்து | 51 |
| 11 | அறநிலையங்களின் நிலவுடைமபற்றி அரசுக்கு வேண்டுகோள் | 215 |
| 12 | அறிவும் ஆற்றலும் | 664 |
| 13 | ஆடத்தெரியாத கடவுள் | 287 |
| 14 | ஆடிப்பெருக்கில் அருட்பெருக்கு | 447 |
| 15 | ஆண்டவன் குணம் எட்டு | 96 |
| 16 | ஆதீனத்திற்கு ஓர் அணிவிழா | 271 |
| 17 | ஆன்மீக நன்மைகளைச் சேகரிக்கும் கருவி | 620 |
| 18 | இதயநோய் பக்கவாதம் தீர, குங்குலியம் | 555 |
| 19 | இயற்கையில் இறைமை | 349 |
| 20 | இராஜகோபாலாசாரியார் பேசிய உரைச்சுருக்கம் | 142 |
| 21 | உடலும் உறவும் | 615 |
| 22 | உத்தராயணம் | 83 |
| 23 | உமாபதிசிவமும் சித்தாந்த நுட்பமும் | 651 |


| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 24 | உறவும் உணர்வும் | 485 |
| 25 | எதற்கும் அஞ்சவேண்டியதில்லை | 398 |
| 26 | எதிர்காலம் | 55, 100, 156, 212, 263, 316, 378, 440, 510, 568, 626, 686 |
| 27 | ஐயாற்றில் அருள்வெள்ளம் | 531 |
| 28 | கங்கையின் புனிதத் தன்மை | 172 |
| 29 | கடிதம் | 162, 257, 667, 672 |
| 30 | கயிலைக்குருமணியைக் கைதொழுது உய்வோம் | 573 |
| 31 | கருவூர்த் தேவரின் கவிதைநலம் | 351, 393 |
| 32 | காட்டில் கேட்ட குரல் | 376 |
| 33 | குந்தியின் அறவுரை | 35 |
| 34 | குறிகளும் அடையாளமும் கோயிலும் | 103 |
| 35 | குறைதீர்த்த குமரன் | 338 |
| 36 | குராப்பள்ளி | 197 |
| 37 | கொழிதமிழ்க்கூடலில் கொன்றை வேணியான் | 36, 127, 184, 240, 294, 362, 409, 479 |
| 38 | கோடி அர்ச்சனை | 508 |
| 39 | கோபூஜை | 86 |
| 40 | கோபூஜையின் மஹிமை | 46 |
| 41 | சித்தமருத்துவக் கலையின் சிறப்பு | 494 |
| 42 | சிந்தைக் கலசம் | 335 |
| 43 | சிரிக்கும் திறம் | 231 |
| 44 | சிவதருமோத்தரக் கட்டுரை | 12, 119, 233, 276, 328, 389, 452, 556, 583 |
| 45 | சிவபோகசார வெண்பாப்பொருள் விளக்கம் | 605 |
| 46 | சிவாகம சாரசர்வஸ்வம் | 253, 304, 345, 369, 426, 673 |
| 47 | சிறுபஞ்சமூலத்தில் திருக்குறள் | 432 |
| 48 | சுதந்திரத்திருநாள் | 515 |
| 49 | செய்திகள் | 52, 97, 146, 210, 258, 308, 369, 435, 503, 563, 623, 679 |
| 50 | சேந்தனாரும் திருவிசைப்பாவும் | 77 |
| 51 | ஞாயிறுபோற்றுதும் | 59 |
| 52 | 'ஞானசம்பந்தம்' இதழ் புத்தாண்டு வாழ்த்து | 10 |

எண் பக்க எண்

53 தமிழ்செய்த திருமூலன் 404
54 தாயினும் நல்ல தயாபரன் 639
55 தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கியருளிய ஆசியுரை 324, 521, 526, 578
56 தருமையாதீனத்தில் நவராத்திரி விழா 571
57 திருக்கடவூரிலே சங்காபிஷேகம் 668
58 திருச்சிராப்பள்ளியில் திருவருட் பெருக்கு 543
59 திருத்தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீஸ்வரசுவாமி
60 திருக்கோயில் பெருவிழா அழைப்பிதழ்
திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு i
61 திருமந்திரம் மூலமும் உரையும் 22, 131
62 தியாகத்திற்கு ஓர் விழா 159
63 தியானம் செய்வதால் உடல்மன அபிவிருத்தி 237
தெய்வத்தமிழ் மாநாட்டு நிகழ்ச்சி (இதழ்-6) i
64 திருமுறைப் பெருமை 655
65 திருவருட்பயன் விளக்கவுரை 17, 188, 227, 282, 356, 457, 599
66 திருவாசகத்துள் அன்பியல் 202
67 திருவாசகத்துள் இன்பியல் 247
68 திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி 139, 180, 413, 470, 589, 645
69 தீப தரிசனம் 25
70 தீபாவளி வாழ்த்து 621
71 துறவிலும் துறவு 419, 463
72 தெய்வத் திங்கள் 1
73 தேனும் அதன் மகத்துவமும் 455
74 தொடக்கப் பேருரை 42
75 நான்கண்ட தவப்பெண் 393
76 நானும் தானும் 659
77 நேருசொன்ன நீதிமொழிகள் 16
78 பாட்டுக்குள் ஒருபாட்டு 664
79 பாம்புக்கடிக்குப் பயப்படவேண்டாம் 246
80 பார்வையாளர் குறிப்பு நகல் 121, 286, 331, 337, 344, 355, 366, 382, 398, 403, 403, 418, 446, 490, 542, 562, 619, 622


| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 81 | பாராட்டுப் பணிவுப் பாமலர் | 40 |
| 82 | பாவம்போக்கும் முழுக்கு | 629 |
| 83 | புத்தக விலைப்பட்டியல் | 267, 443 |
| 84 | புத்தாண்டே வருக | 226 |
| 85 | பொங்கல் வாழ்த்து | 69 |
| 86 | மகாசிவராத்திரி வரலாறு | 115 |
| 87 | மதிப்புரை | 174 |
| 88 | மனமாற்றம் | 134 |
| 89 | மனிதன் உயர்ந்தவனா? | 383 |
| 90 | மானுடம் கற்குமோ? | 614 |
| 91 | முப்பத்திரண்டு அறங்கள் | 49 |
| 92 | முப்பதாம் ஆண்டுமலர்ப் பொருளடக்கம் (இதழ் 1) | i |
| 93 | முப்பத்தொன்றாம் ஆண்டுமலர்ப் பொருளடக்கம் (இதழ் 1) | iv |
| 94 | மூதறிஞர் இராஜாஜி அவர்கள் மறைவு | 91 |
| 95 | வள்ளலார்கோயில் | 587 |
| 96 | வாழ்வும் வளமும் | 300 |
| 97 | வாழும் நெறி | 541 |
| 98 | விற்பனைக்குரிய நூல்களின் விலைப்பட்டியல் (இதழ் 2) | I |
| 99 | வேதம் ஊன்றும் பலா | 169 |
| 100 | ஸ்ரீ சம்பந்தசரணாலய சுவாமிகள் | 31 |
| 101 | ஸ்ரீ சனிபகவான் | 395 |
| 102 | ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் தலைமையுரைச் சுருக்கம் | 194 |
| 103 | ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசிச்செய்தி | 7 |
| 104 | ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை | 64, 108, 164, 222, 634 |
| 105 | ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையுரைச் சுருக்கம் | 194 |

சென்னையில் தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தை இராஜாஜி அவர்கள் திறந்துவைத்தபோது



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இராஜாஜி அவர்களுக்கு முதல் திருமுறையை ஆசியுடன் வழங்குதல்.

சென்னையில் தருமையாதீனமடாலய தேவாலய சமயப் பிரசாரநிலையத்தை இராஜாஜி அவர்கள் திறந்துவைத்தபோது



இராஜாஜி அவர்களும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களும் நூல் நிலையத்தைப் பார்வையிடுதல்

உ

குருபாதம்

# " ஞானசம்பந்தம் "

## தருமையாதீனத் திங்களிதழ்

## அன்பர்கட்கோர் அறிவிப்பு

தருமையாதீனத்திலிருந்து திங்கள்தோறும்மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமணமும் வீசி சிவஞானத்தேன் நிறைந்து கற்போர் கருத்தைக் கவர்ந்துவரும் " ஞான சம்பந்தம் " முப்பத்தோராவதாண்டு நிறைவைப்பெற்று முப்பத்திரண்டாவது ஆண்டில் மிக்க எழிலுடன் வெளி வருகிறது.

30—11—72 ஆம் நாளுடன் " ஞானசம்பந்தம் " இதழின் ஆண்டு நிறைவுற்றதால் பழைய சந்தாதாரர்கள் தனி அறிவிப்பை எதிர்பாராமல் மீண்டும் தொடர்ந்து ஆண்டுக் கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர் களாகச் சேர விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக் கட்டணம் அனுப்பியும் " ஞானசம்பந்தம் " இதழைப் பெற்றுக் கற்றுப் பயனுறுவார்களாக.

வேலை மிகுதியினுலோ அல்லது மறதியினுலோ ஆண்டுச் சந்தா செலுத்துவதில் தடை ஏற்படலாம். தடையில்லாமல் ஞானசம்பந்தம் பெற வாய்ப்பளிக்கும் முறையில் ஆயுள் சந்தா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆயுள் சந்தா அறிவிப்புச் செய்த ஆறுமாதத்தில் 134 அன்பர்களுக்கு மேலாக ஆயுள் சந்தா செலுத்தி ஆயுள் உறுப்பினராகி உள்ளனர்.

ஆயுள் சந்தா செலுத்தினல் அவர்களது வாரிசுகளும் ஞானசம்பந்தம் பெற வசதி செய்து தரப்படும். மேலும் தமது ஆயுள் சந்தாவை மற்றவர்களுக்கோ, கல்வி அறநிறுவனங்களுக்கோ மாற்றிக்கொடுக்க விரும்பினல் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்துதரப்படும். இவ்வரியவாய்ப்பைப் பயன்படுத்தி ஆயுள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஞானசம்பந்தம் பெற்றுப் பயன் அடையுமாறு கேட்டுக்கொள்கிறேம். இன்றே தங்களை ஆயுள் உறுப்பினராக்கிக் கொள்ளுங்கள்.

சமய உணர்வைப் பெருக்கும் இத்திங்களிதழ் தங்கட்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் நற்பயன் தருவது. பல்லாயிரவர் ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்திட வாரீர்!

சென்னை, திருச்சி, கடலூர். புதுவை, மதுரை, நெல்லை, குடந்தை ஆகிய ஊர்களில் விற்பனை ஏஜண்டுகள் தேவை. 25% கமிஷன் கொடுக்கப்படும். விபரத்திற்குத் தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா .... .... .... | ரூ. | 100—00 |
| ஆண்டுச் சந்தா (உள்நாடு) .... | ரூ. | 4—00 |
| ,, (வெளிநாடு).... | ரூ. | 6—00 |
| தனி இதழ் .... .... .... | பைசா. | 0—40 |

செயலாளர்,

ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் அஞ்சல்.
தஞ்சை மாவட்டம்.